


# ரமணோதயம்

ஜூலை 2019
காலாண்டு

அருணை விஜய இதழ்
விலை ₹ 20



## ரமணோதய அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள்
தயவுசெய்து தங்களது சந்தாவைப்
புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச்
செலுத்தவோ செய்து உதவுமாறு கேட்டுக்
கொள்கிறோம்

உதயம் 18 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 4

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

அருணை விஜய இதழ்

ஜூலை 2019

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

• கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

• கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.

• மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20

ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் ‘ரமணோதயம்’ என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
ஆ. குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

அருணை விஜய இதழ், ஜூலை 2019


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | இனிவரும் திருநாட்கள் | | 15 |
| 3 | க்ரேஸி எனும் சகாப்தம் | ராம்மோஹன் | 16 |
| 4 | ரமணாயனம் | க்ரேஸி மோஹன் | 19 |
| 5 | பேரமைதி நிலவிய பெருநாட்கள் | | 26 |
| 6 | இக்காலத் தேவை | வீரராகவன் | 37 |
| 7 | சும்மாயிரு சுகம் உனக்கே | சு. பரமேஸ்வரன் | 41 |
| 8 | எல்லா மைலார்ட் -3 | வி. நிரஞ்சன் | 47 |
| 10 | மேதா ஸூக்தம் | வி.ஆர்.கணேசன் | 59 |
| 11 | பகவானின் சந்நிதியில் யோகர் சுவாமிகள் | | 69 |
| 12 | செய்திகள் | | 73 |


பின் அட்டை: விரூபாக்ஷ குகை வெளித் தோற்றம்

ஔவைக் குறள், அக்ஷரமணமாலை ஒரு தத்துவக் குருவூலம் மற்றும் ரமண மையங்களை நோக்கி - தொடர்கள் அடுத்துவரும் இதழ்களில் வெளிவரும்

## ஆசிரியர் உரை

# ஜீவனும் சிவமும் — வெட்டவெளியின் வேதாந்தம்

*பகவான் அக்ஷரமணமாலையின் 85 மற்றும் 91-ஆவது பாடல்களில் ஓர் அழகான கருத்தைக் கூறுகிறார்:*

*“மொட்டை அடித்தெனை வெட்டவெளியில் நீ*
*நட்டமாடினை என் அருணாசலா” (85)*

*(அஹங்கார, மமகாரங்களை என்னிடமிருந்து அறவே நீக்கி, தூய்மை அடைந்த என் இதயப் பெருவெளியில் பேரானந்தம் பெருநடனம் செய்கிறாய், அருணாசலா!)*

*“ராப்பகலில்லா வெறுவெளி வீட்டில்*
*ரமித்திடுவோம் வா அருணாசலா” (91)*

*(அருணாசலா! இரவு பகலற்ற, சிதாகாசம் பரந்திடும் இதயவீட்டில் நாம் இரண்டறக் கலந்து, அத்வைத அநுபவத்தில் திளைப்போம், வா!)*

*அருணாசலன் அருளிய சுத்தமனம் சிதாகாசப் பெருவெளியில் எங்கும் விரிந்து பரந்துள்ளது. இதற்குத் தடையாய் எழுந்த ‘நான்’ என்னும் தன்முனைப்பை மொட்டை அடித்து, ஆனந்த நடனம் செய்கிறான் அருணாசலன். பரமாத்மாவைத் தவிர வேறு ஒன்றும் இல்லாத நிலை ‘வெட்டவெளி’ என்றும் ‘வெறுவெளி’ என்றும் பகவானால் கூறப்படுகிறது.*

*தமிழ் வேதாந்தத்தில் ஆத்ம சாட்சாத்காரம் 'வெளி' என்னும் சொல்லால் குறிக்கப்பெறுகிறது. வெட்டவெளி (பட்டினத்தார் அருட்புலம்பல் 240) உயர்வெளி (குதம்பை சித்தர் 11), வேதாந்த வெளி (பாம்பாட்டி சித்தர் 117) கருவூரற்ற வெளி (சிவவாக்கியர் 350) முப்பாழ் [திருமந்திரம் (2834)].*

*குஹ்ய சமாஜ தந்திரம் என்னும் தந்திர சாஸ்திர நூல் இந்த வெறுவெளி நிலையை யோக சாஸ்திரத்தில் ஐந்து நிலைகளாக உருவகிக்கிறது.*

*(1) கானல் நீர் – மாயையின் பாற்பட்ட இவ்வுலகம்*

*(2) புகை – அக்னியின் சார்பு இல்லாமல் புகை தோன்றாததுபோல், பரமாத்மா இல்லாமல் இச்சாயை உலகம் தோன்றி இருக்க இயலாது.*

*(3) மின்மினிப்பூச்சி – தூய ஞானம் ஆரம்ப சாதனை நிலையில் கணத்தில் இதயத்தே தோன்றி மறைகின்றது.*

*(4) எரியும் விளக்கு – ஞானம் முழுமையாய் வந்து உற்றபின்னர் அமைதியாய் எரியும் விளக்கு போன்று உள்ளத்தே பிரகாசிக்கிறது.*

*(5) இறுதிநிலை களங்கமற்ற ஆகாயம்போல் சிதாகாசம் வெட்டவெளியாய் பரவி நிற்கிறது. வரம்பற்ற பரிமாணம் கொண்ட இந்த வெட்டவெளி எல்லாவற்றையும் தன்னுள்ளே அடக்கியது.*

*வெட்டவெளி என்னும் சொல் 'உள்ளது' எனப்படும் இருப்பைப் பற்றிய உணர்வு. பகவான் உள்ளது நாற்பது மங்கல வெண்பாவிலேயே இந்த நிலைகுறித்துக் கூறுகிறார்.*

***"உள்ளதுஅலது உள்ள உணர்வு உள்ளதோ- உள்ளபொருள்***
***உள்ளல்அற உள்ளத்தே உள்ளதால் – உள்ளமெனும்***
***உள்ளபொருள் உள்ளல் எவன்? உள்ளத்தே உள்ளபடி***
***உள்ளதே உள்ளல் உணர்."***



பொருள்: எப்போதும் உள்ளதாகிய ஒரு மெய்ப்பொருள் – ஸத் – இருந்தாலன்றி, 'இருக்கிறேன்' என்ற இருப்பு உணர்வு தோன்றுமா? உள்ளதாகிய எந்த மெய்ப்பொருள், மனத்தின் ஓட்டம் முற்றிலும் நிற்கும்போது, சாதகனின் அநுபவத்தில் புலப்படுகிறது: அந்த உள்ளபொருளை எங்ஙனம் தியானிப்பது எப்படி? அந்த உள்ளபொருளை எத்தகைய எண்ணங்களும் இன்றி உண்முகநோக்கால் உணர்வதே தியானம் என்கிறார் பகவான். இந்த எண்ணமற்ற பரவெளியில் கரைவதே உண்மையான தியானம்.

திபெத்திய யோகத்தில் கூறப்படும் 'திக்-லெ' என்பது இந்த வெறுவெளி நிலையை ஒத்து அமைகிறது. இந்துசமய தந்திர சாஸ்திரத்தில் கூறப்படும் 'பிந்து' என்பது ஒத்து இது அமைகிறது. திபெத்திய யோகப் பயிற்சியின் போது, சாதகனின் உள்வெளி, அந்தராகாஸம், ஒவ்வொரு கட்டமாக மடல் அவிழ்கிறது. இந்த மடல் அவிழ்தலின்

ஆரம்பப் புள்ளியே திக்-லெ. இந்த மடலவிழ்ந்தபின் இறுதிப் புள்ளியில் அகவெளி அவிழ்ந்து, அவிழ்ந்து புற வெளியாகிய பரவெளியுடன் கலக்கிறது. அகவெளியின் தனிப்பட்ட நிலை அழிந்து அது பரவெளியுடன் அத்வைத நிலையில் ஒன்றுவது அந்த இறுதிப்புள்ளி. திக் லெ என்னும் சொல் ஆரம்பப் புள்ளியை மட்டும் அன்றி, இறுதிப் புள்ளியையும் குறிக்கிறது. முதலும் முடிவும் ஒன்றே என்ற வேதாந்தக் கருத்தை ஒத்து உள்ளது இது. இந்த நிலையையே வைஷ்ணவர்கள் நித்ய ப்ருந்தாவனம் என்று கூறுகின்றனர்.

பகவான் ஆத்ம சாட்சாத்கார பிரகரணத்தில் (பா. 11) கூறுகிறார்:

"எவ்வளவு காணப்படுபவோ இவ்வுலகில்
எவ்வளவு கேட்க இயைபவோ – உள்ளொளி
பற்றி ஒளிர் யாவும் பரவும் என்னால் பரவல்
உற்றவை யாமவை என்றுஓர்."

பொருள்: இந்த உலகத்தில் எத்தனை விஷயங்கள் காணப்படுகின்றனவோ, எத்தனை விஷயங்களின் சப்தங்கள் கேட்கப்படுகின்றனவோ மற்றும் உடலை மையமாகக் கொண்டு உள்ளும் புறமும் தோன்றுகின்ற பொருட்கள் யாவும், எங்கும் பரவி நிற்கும் பரமாத்மாவால் அவை யாவும் விவரிக்கப்படுகின்றன.

"ஸர்வம் கல்விதம் ப்ரம்ஹ
தஜ்ஜலானி ஸாந்த உபாஸீத்"

நாம் காணும் உலகில் உள்ள பொருட்கள் யாவும் ப்ரஹ்மத்திலிருந்தே எழுகின்றன. அதாலேயே நிலைப்படுத்தப் படுகின்றன; இறுதியில் அதிலேயே ஒடுங்குகின்றன.

ஆங்கிலக் கவிஞரான வான்டைக் கூறுகிறார்:

*Back of the canvas that throbs*
*The painter is hinted and hiding*

*Into the statue that breaths*
*Soul of the sculptor is bidden*

இதே கருத்து பகவத் கீதையிலும் கூறப்படுகிறது.

*"ஸமம் ஸர்வேஷு பூ4தேஷு திஷ்ட2ந்தம் பரமேஶ்வரம் .*
*விநஶ்யத்ஸ்வ விநஶ்யந்தம் யஹ் பஶ்யதி ஸ பஶ்யதி .."*

*– (13:28)*

எல்லா ஜீவன்களிலும், அசேதனப் பொருட்களிலும் ஊடுருவி உள்ள பரமாத்மா, இறப்பு அற்றவற்றிலும், இறப்பவைகளிலும் உள்ளான். அவன் மட்டுமே காண்பவன். (பகவத் கீதா, 13.28)

பகவான் கூறும் இந்த வெறுவெளியில் அறிவானும் இல்லை. அறியப்படும் பொருளும் இல்லை. குருவும் இல்லை; சீடனும் இல்லை. இருப்பது ஒன்றேயான 'உள்ள பொருள்'.

*"ஓடம் உள்ள போதிலோ ஓடியே உலாவலாம்*
*ஓடம் உள்ள போதிலோ உறுதி பண்ணிக் கொள்ளலாம்*
*ஓடம் உடைந்த போதில் ஒப்பில்லாத வெளியிலே*
*ஆடும் இல்லை; கோலும் இல்லை; யாரும் இல்லை ஆனதே!"*

*– (சிவவாக்கியர் 23)*

உள்ளது நாற்பது நூலில் பகவான் கூறும் முதல் பாடலிலேயே இக்கருத்து வருகிறது அல்லவா!

*நாமுலகம் காண்டலால் நானாவாம் சத்தி உள;*
*ஓர்முதலை ஒப்பல் ஒருதலையே – நாமஉரு*
*சித்திரமும் பார்ப்பானும் சேர்படமும் ஆரொளியும்*
*அத்தனையும் தானாம் அவன்.*

*– (உள்ளது நாற்பது, 1)*

உண்மையான ஆனந்தம் வெறுவெளியில் தான் தானாக இருப்பதே. இதுவே பகவான் கூறும்

*"யாரும் அறியா வெறுவெளி வீட்டில் ரமித்தல்"*

*பட்டினத்தார் கூறும்*

*“விருப்பு வெறுப்பு இல்லாத வெட்டவெளி அதனில்*
*இருப்பே சுகம்” (நெஞ்சோடு கிளத்தல்-13)*

*இந்த வெட்டவெளியை அடைவதே ஞானம். ஞானம் என்பதே ‘நான்’ என்னும் தன்முனைப்பை இல்லாது செய்வதுதான். ஒரு சாதகன் தன்முனைப்பினை, ‘நான்’ என்ற உணர்வைத் தம் மனத்திலிருந்து அங்கம் அங்கமாக வெட்டி எறியவேண்டும் என்று க்ஷுரிக உபநிடதம் கூறுகிறது. அவ்வாறு முயன்று, ‘நான்’ என்ற தளையில் இருந்து தன்னை விடுவித்துக்கொண்டபின், நம் உணர்வு வெட்டவெளியைச் சார்ந்தது ஆகின்றது. எப்படி வெறுவெளி ஆவது? நமது எண்ணங்கள் யாவும் ஒவ்வொன்றாய் நீங்கி, நம்முடைய உணர்வு ‘பாழ்’ ஆகிறது. நம் ‘பாழ்’ அல்லது ‘சூன்யம்’ வெறும் மாத்யமிக் பௌத்த தத்துவ மடமே அல்ல. ஆழ்வார்களுள் தலையாயர் ஆகிய நம்மாழ்வார் தனது திருவாய்மொழி இறுதிப் பதிகத்தில்,*

*“அத்தனையும் வெறும் பாழே” என்று குறிப்பிடுகிறார்கள்.*

*பகவானும் தேவிகாலோத்தரம் 27-ஆவது பாடலில் இதனையே பிரதிபலிக்கிறார்.*

*“விடயத்தில் ஆசை விடாதே குரங்கை*
*விடச் சலி சித்தத்தை விடாது – மடக்கி*
*சருவ சூன்ய பதத்தில் தாபிக்க அஃதால்*
*நிர்வாணம் உற்றிடுவன் நேரே.”*

*– (தேவிகாலோத்தரம், 27)*

*‘சர்வ சூன்யபதம்’ மற்றும் ‘நிர்வாணம்’ என்னும் பகவானின் சொற்பிரயோகம், மாத்யமிக பௌத்த தத்துவத்தில் சூன்யம் என்றும் ‘பாழ்’ மற்றும் வெட்டவெளி என்றும் தமிழ் வேதாந்த மற்றும் சித்தர் மரபுப் பிரயோகத்தை ஒத்துள்ளது. அருணகிரிநாதர், “எல்லாம் இழந்த நலம்” என்று குறிப்பிடுவது, இதுபோன்று எண்ணங்கள் யாவும் ஒவ்வொன்றாகக் களையப்பட்டு, நம்*

உணர்வு 'பாழ்' அல்லது 'வெறுவெளி'யாகும் நிலையையே கபீர்தாஸர் தன்னுள்ளே தேடி அடையவேண்டிய பரமாத்ம சக்தி 'நிரஞ்சனம்' என்று குறிப்பிடுகிறார்.

இந்த வெறுவெளியை ரிக்வேதம் *(X:129.1)* "அது இருக்கவும் இல்லை; இல்லாமலும் இல்லை" என்று குறிப்பிடுகிறது. முண்டக உபநிஷதமும் எல்லாக் குணங்கட்கும் அற்று நிர்குணமாய் இருப்பது எதுவோ அதுவே எல்லாவற்றிற்கும் மூலகாரணமாய் உள்ளது என்று கூறுகிறது.

சூனியம் என்றால் ஒன்றுமில்லாதது என்று எதிர்மறைப் பொருள் அல்ல. அது காலதேசம் கடந்த ஒரு பரப்பு. ஆசார்ய நாகார்ஜுனர் நிர்வாண நிலையில் மனது சூன்யமாக உள்ளது என்கிறார். "இருத்தல், இல்லாமை, இவை இரண்டுமே இல்லாத நிலை – எது எது என்று வரையறுப்பது கடினம் என்கிறார் அவர்.

*Murder in the Cathedral* என்னும் தனது புகழ் பெற்ற நூலில் T.S. எலியட் கூறுகிறார்:

"சூன்யநிலை – அது நிலமற்று, வெறும் இல்லமை, பாழ்
அங்கே ஆன்மாவை ஏமாற்ற முடியாது; ஏனெனில்
அங்கே பொருள்களே இல்லை;
ஒலிகள் இல்லை; நிறங்கள் இல்லை
"ஆன்மா தன்னைத்தானே பார்த்துக்கொள்ள முடியாமல்
திசை திருப்புகின்ற கவனம் சிதைக்கும் வடிவங்கள் இல்லை;
சூன்யம் சூன்யத்தோடு நிரந்தரமாகவும் முழுமையாகவும்
ஒன்றி நிற்கிறது."

ஓர் அறைக்குள் அடைக்கப்பட்ட தேவையற்ற பொருட்கள் அனைத்தும் நீக்கப்பட்டபோது அங்கு இருப்பது வெறுமை அல்ல. அங்கே அறையின் தடையற்ற முழுமையே நிரம்பி உள்ளது. அதுவே சூன்யம். அதுவே பூர்ணம். அதுவே வெறுவெளி.

தாயுமானவர் தமது 'ஆனந்தக் களிப்பில்' இது குறித்து எழிலுற உரைக்கிறார்.

"அருளாலே எவையும் பார் என்றான் - அத்தை
அறியாமலே சுட்டி என்அறிவாலே பார்த்தேன்
இருளானபொருள் கண்டது அல்லால் – கண்ட
என்னையும் கண்டிலன் என்னேடி தோழி!
விளையும் சிவானந்தபூமி – அந்த
வெட்டவெளி நண்ணித் துஷ்ட இருளாம்
களையைக் களைந்துபின் பார்த்தேன் – ஐயன்
களையன்றி வேறொன்றும் கண்டிலன் தோழி!"

– (ஆனந்தக் களிப்பு, 13, 14)

இந்த வெட்டவெளியே வேதாந்தத்தில் "நிராலம்ப நிலை" சார்பற்ற நிலை எனக் கூறுப்படுகிறது.

வேதாந்தத்தில் வெறுவெளி என்பது 'அநிர்வசனீயம்' – விவரிக்க ஒண்ணாத ஒன்று "அறிவு இருமை இல்லாது, காரண, காரிய, கர்மம் வார்த்தை அனைத்தையும் தாண்டி, வரையறை இல்லாத நிலை – அது சொல்லுக்குச் சிக்காத நிலை" (முண்டகம், VI —7). இதனையே 'தாவோ' என்று குறிப்பிடுகின்றனர். எதற்கெல்லாம் பெயர் இடப்பட்டுள்ளதோ அது எல்லாம் 'தாவோ' என்று. ஏனெனில் ஒருபெயர் அதனை ஓர் எல்லைக்குட்படுத்தி விடுகிறது. உண்மையில் 'தாவோ' என்னும் மெய்ஞ்ஞானம் எல்லையற்றது.

நாம் வழக்கத்தில் பயன்படுத்தும் சாமான்யமான சொல்லாகிய 'சும்மா' என்பதும் இந்த வெறுவெளியையே குறிக்கிறது. வரையற்ற அந்தப் பேரின்ப நிலையில் நாம் அனுபவிப்பதே, 'சும்மா' இருத்தல்: 'ஸ்வம்' ஆக – தான் தானாகவே இருத்தல். இதையே பகவான்

"சுகக்கடல் பொங்கச் சொல் உணர்வு அடங்கச்
சும்மா பொருந்திடுஅங்கு அருணாசலா."

– (அக்ஷரமணமாலை, 31)

என்று பகவான் அறிவுறுத்துகிறார்.

*"சும்மா இரு! சொல்லற! என்றலுமே*
*அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே."*

*– (கந்தர் அனுபூதி)*

'சும்மா' என்பதற்கு விளக்கம் கூற முடியுமா? 'சும்மா' என்றாலே அமைதிதானே! அமைதியை விளக்குவதற்காக எந்தச் சொல்லைப் பயன்படுத்தினாலும் அமைதி சிதைந்துவிடும் அல்லவா?

அதை விளக்க முற்படுவது வாயில்லா ஊமை ஒருவன் விளக்க முயல்வதுபோல் ஆகும்.

*"உரைஅற்றது ஒன்றை உரை செயும் ஊமர்காள்*
*கரைஅற்றது ஒன்றைக் கரை காணல்ஆகுமோ*
*திரையற்ற நீர் போலச் சிந்தை தெளிவார்க்குப்*
*புரையற்று இருந்தான் புரிசடையோனே."*

*– (திருமந்திரம், 2695)*

*(திரை அற்ற நீர்: அலைகள் அற்ற தெளிந்த கடல் புரை அற்று இருந்தானை: தன்னைவிட உயர்வாக எவரும் இல்லாத ஈஸ்வரன்)*

இத்தகைய மௌனம் வெறும் வாய் பேசாதிருத்தல் மட்டும் அல்ல. அது தாயுமானவர் கூறுவதுபோல் சித்த மௌனம், மன வாக்கு எல்லாம் மௌனம் சுத்த மௌனம்.

பகவான் கூறுவதுபோல் 'மௌனம்' என்பது 'இடையறாப் பேச்சு' 'சும்மா' என்பது 'இதயம் பேசுகிற மௌன மொழி' 'மோனம்' என்பது 'ஞான வரம்பு'.

அபுயாசித் அல் பிஸ்தான் என்கிற சூஃபி ஞானி கூறுகிறார்:

*"மௌனத்தைவிட வெளிச்சமான விளக்கு*
*ஒன்றை நான் கண்டதில்லை;*
*பேசாமையை விடச் சிறந்த*
*பேச்சொன்றை நான் கேட்டதில்லை."*

இதுவே பகவான் கூறும் "தூங்காமல் தூங்கும் நிலை"

மணிவாசகர் கூறும் நோக்கரியே நோக்கு, நுணுக்கரிய நுண்ணுணர்வு. ஜே. கிருஷ்ணமூர்த்தி கூறுவதுபோல் 'தேர்வு அற்ற விழிப்புணர்வு' *(Choiceless Awareness)* மீஸ்தர் எக்கார்ட் கூறும் 'தெய்வீகத்தின் அமைதிப் பாலைவனம்' *(Silent Desert of Godhood)*

இவ்வாறு சொல்லும் செயலும் அற்ற நிலையே 'சோம்பர்' என்று பகவான் குறிப்பிடுகிறார்.

"சோம்பியாய்ச் சும்மா சுகம் உண்டு உறங்கிடில்
சொல்வேறு என்கதி அருணாசலா" – (மணமாலை 37)

பொருள்: முக்கரணங்களின் செயல் ஏதுமற்று ஆத்மாவுக்கான அயலான விஷயங்களில் எந்தப் பற்றும் இன்றி, எந்த முயற்சியும் இல்லாமல் தன்னுள்ளே எழும் பரமாத்ம ஆனந்தத்தை அனுபவிப்பதே சாட்சாத்கார நிலை. அதற்கு மேலாக வேறு எதானும் உள்ளதா என்ன?

இதுவே இருமையற்ற ஒருமை. ஸ்வபாவத்தில் ஒன்றேயான, தோற்றத்தில் வேறுபட்ட இரண்டு, தம் மயக்கம் நீங்கி ஒன்றாவதே அத்வைத நிலை.

"அம்புவில் ஆலிபோல் அன்புருவில் எனை
அன்பாய்க் கரைத்தருள் அருணாசலா."

– (அக்ஷரமணமாலை, 101)

தண்ணீரையே தனது மூலக் கூறுகளாய்க் கொண்டுள்ள ஆலங்கட்டி, வெப்பத்தினால் கரைந்து மீண்டும் அந்தத் தண்ணீராகவே ஆவதுபோல், அன்புருவாகிய உன் ஸ்வரூபத்தில் என்னைத் தன்மயமாகக் கரைத்தருள்வாய் அருணாசலா! என்று வேண்டுகிறார் பகவான்.

இதே கருத்தை இடைக்காடரும் கூறுகிறார்:

"அப்புடனே அப்புசேர்ந்து அளவு சரியானதுபோல்
ஒப்பளவே பிரம்மமுடன் ஒன்றிநில் மடமனமே!"

– (இடைக்காடர் 74)

ஆத்ம சாட்சாத்காரம் என்பது ஓர் அனுபவம். அது மெய்யுணர்வு. முந்தைய நடவடிக்கை எதனோடும்

தொடர்பற்று, தன்னைத்தானே நிலைநிறுத்திக் கொள்வது. அது தன்னளவிலேயே இருப்பு உடையது. பகவான் கூறுகிறார்: ஆத்ம சாட்சாத்காரம் என்பது அடையப்பட வேண்டிய ஏதோ ஒன்று அன்று; மாறாக அதுவே எல்லாவற்றிற்கும் அடிப்படை. ஞானத்தின் மூலமே முக்தி அடையமுடியும். மற்றவை எல்லாம் ஞானம் பெற நம்மைப் பக்குவப்படுத்தும் சித்த சுத்தி செய்யும் உபகரணங்களே என்கிறார் பகவான். இதே கருத்தைத் திருமூலரும் எதிரொலிக்கிறார்.

"ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவாம்
ஞானத்தின் மிக்கார் நரரின்மிக் காரே."

– (திருமந்திரம் 1467)

இறைவனை அறிந்து அடையவேண்டும் என்ற ஆசையும், பக்தியும் மட்டும் போதாது. ஞானம் தேவை பெறும் பக்தி மட்டும் இருந்தால் சில நாட்களில் அது மனச்சோர்வை உண்டாக்கலாம். எனவே ஆசை, பக்தி என்றநிலையைத் தாண்டி முன்னேறி, ஞான நெறியில் செல்க என்கிறார் பகவான்.

"ஞானமில்லாது உன் ஆசையால் தளர்வற
ஞானம் தெரித்தருள் அருணாசலா."

– (அக்ஷரமணமாலை, 40)

தன்னை அறிதலே தலையாய கடமை. தலையாய யோகம். இதுவே பகவான் உபதேசம்.

"தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தானிருந் தானே."

– (திருமந்திரம் 2365)

தன்முனைப்பில் இருந்து விடுபட்டு தனது உண்மையான அடிப்படையை ஒருவன் அறியும்போது

தன்னை உணர்தல் நிகழ்கிறது. இந்த இறுதிக் கரைதலை சூஃபி ஞானியர் ஃபானா என்று அழைக்கின்றனர். ஃபானா என்ற சொல்லுக்கு உயிரோடு இறத்தல் என்பது பொருள். 'நான்' என்னும் ஆணவம் அழியும்போது ஒருவன் மரணமில்லாப் பெருவாழ்வை எய்துகிறான். இதுவே மதுரையில் பகவானுக்கு நிகழ்ந்த நிலை. இது ஞானசம்பந்தர் கூறும் நிலை. பிணிபடும் உடம்பை விட்டு இறக்குமாறு காட்டி, மீண்டும் ஞானதேகத்தில் உயிர்பெற வைத்த பெருங்கருணையை திருத்துருத்திப் பதிகத்தில் பாடுகிறார் ஞானசம்பந்தப் பெருமான்.

*"அவனைத் தேடித்தேடி புறத்திலே அலைந்தனன்*
*நானிருக்கும் இடத்திலேயே அவனை நான் கண்டனன்*
*அவனேதான் இப்போது நானாக நின்றனன்*
*அவனையா முன்னம் நானும் வேறொருவன் என்றனன்?"*

என்று கபீர் பாடுகிறார்.

ஞானியரைப் பொறுத்தவரை மெய்யுணர்வு அடைந்த நிலையில் ஜீவன், சிவன் என்ற வேறுபாடே இல்லை.

*"அன்னியனாம் சிவன் அன்னியம் நான்என்னும்*
*பின்ன பாவத்தைப் பெயர்த்திடுக – அன்னசிவன்*
*ஆவன்யானே என்னும் அத்துவிதம் ஆகும்இப்*
*பாவனையே என்றும் பழகு."*

*– (ஆன்மசாட்சாத்கார பிரகரணம், 13)*

என்று சிவ-ஜீவ அபேதத்தை பகவான் விளக்குகிறார்.

இதையே

*"இருக்கும் இயற்கையால் ஈசஜீவர்கள்*
*ஒருபொருளே யாவர் உந்தீபற*
*உபாதி உணர்வேவேறு உந்தீபற!"*

*– (உபதேச உந்தியார், 24)*

என்று பகவான் அறுதியிட்டுக் கூறுகிறார்.

*“நான்என்றும் தான்என்றும் நாடினேன் நாடலும்*
*நான்என்றும் தான்என்றும் இரண்டுஇல்லை என்பது*
*நான் என்ற ஞான முதல்வனே நல்கினான்*
*நான்என்ற நானும் நினைப்பு ஒழிந்தேனே.”*

*– (திருமந்திரம், 2820)*

ஜீவன் வேறு; சிவன் வேறு என்று எண்ணி சிவனைத்தேடி எங்குஎங்கோ அலைந்தேன். என் சத்குருநாதன் சிவன் ஜீவன் வேறுவேறு அல்ல. இரண்டும் ஒன்றே. அந்த ஒன்றே ‘நான்’ என்று ஞானமுதல்வனாம் குரு உபதேசித்தான். அக்கணமே எனது தன்முனைப்பு ஒழிந்து நான் சிவன் ஆனேன் என்கிறார் திருமூலர்.

மீண்டும் உரையாடுவோம்.

பகவான் பணியில் தங்கள்,

ராம் மோஹன்.

# இனிவரும் திருநாட்கள்

| 2019 | | | |
|---|---|---|---|
| ஜூலை | 13 | சனி | பசு லட்சுமி தினம் |
| | 16 | செவ்வாய் | குருபூர்ணிமா |
| செப்டம்பர் | 01 | ஞாயிறு | அருணை விஜய தினம் |
| | 29 | ஞாயிறு | நவராத்திரி விழா தொடக்கம் |
| அக்டோபர் | 07 | திங்கள் | சரஸ்வதி பூஜை |
| | 08 | செவ்வாய் | விஜயதசமி |
| | 27 | ஞாயிறு | தீபாவளி |
| டிசம்பர் | 01 | ஞாயிறு | கார்த்திகை தீபவிழா தொடக்கம் |
| | 10 | திங்கள் | கார்த்திகை தீபம் |



# க்ரேஸி எனும் சகாப்தம்

**ராம்மோஹறன்**

*தமிழ் நாடக உலகில் சக்திவாய்ந்த சுனாமியாய்க் கலக்கிய நகைச்சுவைத் தென்றல் ஜூன் 10 அன்று ஓய்ந்தது. ஆம்! நகைச்சுவை வித்தகரும் பகவானின் ஆழ்ந்த பக்தருமான க்ரேஸி மோஹறன் தன் உடலை நீத்து, பரத்துடன் ஒன்றினார்.*

*பல துறைகளில் தனது நீங்காத முத்திரையைப் பதித்தவர். 6500 தடவை வெற்றிகரமாக நகைச்சுவை நாடகங்களின் கர்த்தா. இவரது 'சாக்லேட் கிருஷ்ணா' நாடகம் மட்டுமே 1009 தடவை நடத்தப்பெற்றுள்ளது.*

*அவரது முதல் நாடகமான 'க்ரேஸி தீவ்ஸ் இன் பாலவாக்கம்' என்ற பெயரினை ஒட்டி அவருக்கு 'க்ரேஸி' என்ற பெயர் வந்திருக்கலாம். பார்க்கப் போனால் அவர் ஒரே கிரேஸியாய் பித்தாய் இருந்தது பகவானிடம் கொண்ட ஆழ்ந்த பக்தியில். பகவானின் நூல்கள் முழுவதையும் ஆழ்ந்து கற்றவர்.*

அவரது உபதேசங்களில் தம் நெஞ்சத்தைக் கரைத்துக் கொண்டவர். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு நமது ரமணோதயம் இதழில் தொடராக வருகின்ற ‘ரமணாயனம்’ தொடர். பகவானின் பிறப்பிலிருந்து ஆரம்பித்து, அவரது இளவயதின் மனங்கவரும் சம்பவங்கள், மதுரையில் ஏற்பட்ட மனமாற்றம், அருணை விஜயம், பக்தர் குழாம் சேருதல், அருணை ஆலயம் முதல் ஆஸ்ரம வாழ்க்கைவரை பல்வேறு இடங்களில் பகவானின் வாழ்க்கை, அன்பர்களைப் பற்றிய விவரங்கள், பகவானின் உபதேசம் அனைத்தையும் ஒன்று விடாமல் எழிலுற ஆற்றுப் போக்கான தெளிந்த வெண்பாக்களாக வடிவமைத்துத் தந்திருந்தார் மோஹன்.

மிகக் கடினமான ஆன்மிகக் கருத்துக்களைக் கூட, கருத்தாழம்மிக்க வெண்பாக்களாக தெள்ளத் தெளிவாகத் தந்த பகவான் ஒரு வெண்பா வேந்தர். அவரது ஆழ்ந்த பக்தரான க்ரேஸி மோஹனும் மிகச்சிறந்த வெண்பா சிற்பி.

பல்லாண்டுகளாக எனக்குத் தினமும் வெண்பாக்களை அனுப்பி வந்திருந்தார். ஆன்மிகம், பக்தி, எழிலியல் போன்ற பல்துறைச் சார்ந்த 40000 வெண்பாக்களை இங்ஙனம் படைத்து இருக்கிறார். சென்ற திங்கள் ரமணோதயத்தில் தேர்ந்து எடுத்த வெண்பாக்களை ஸ்ரீமதி. காயத்ரி கிரிஷ் நாரத கான சபாவில் கர்நாடக இசையுடன் வழங்கிய சிறப்புமிக்க நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது என்னிடம் ரமணாயனப் பாக்களை ரசிக்கும் பலர் பல இடங்களில் பொருள் புரிவதில்லை என்று கூறுகிறார்கள். இதற்கு நீங்கள் பொழிப்புரை எழுதுங்கள். அடுத்த வெளியீடாக இதைக் கொணரலாம் என்று கூறினார். நான் மீண்டும் அவரைச் சந்தித்து இது குறித்துப் பேசுவதற்குள்ளாக பகவான் அவரை அழைத்துக் கொண்டார்.

மெக்கானிக்கல் இன்ஜினியராகப் பயின்று, பல்துறை வித்தகராகத் திகழ்ந்த மோஹன் உண்மையில் குழந்தை மனம் படைத்தவர். எளிமையின், அடக்கத்தின் சிகரம். தனது நிகழ்ச்சிகளற்ற நேரம் எல்லாம், 10x10 அடி அளவே உள்ள தமது அறையில், சுற்றிலும் கடவுளர் படங்கள், பகவானின் படம், சாயிபாபா சித்திரம் போன்றவை சூழ்ந்திருக்க, தன்னுள்ளே ஆழ்ந்த ஆத்ம சாதனை செய்து வந்தவர் மோஹன். *Crazy about Ramana* என்ற பகவான் தன்னை ஈர்த்த விதத்தைக் கூறும் இவரது நூல் ஓர் ஆன்மிகப் பொக்கிஷம்.

பகவானின் உபதேசத்தினை உள்வாங்கிப் பின்பற்றிய மோஹன், அகங்காரம், செருக்கு சிறிதும் அற்றவர். ரமண கேந்திர விழாவிற்கு நான் அழைத்த போதெல்லாம், எவ்வளவு வேலை இருப்பினும் தட்டாது வந்து, தனது டிரேட் மார்க் நகைச்சுவையையும், பக்தியையும் எழிலுறக் கலந்த சொற்பொழிவை வழங்குவார். சமயம் கிடைக்கும் போதெல்லாம் ரமண கேந்திரம் வந்து பகவான் திருமுன்னர் சாந்தமாக வீற்றிருப்பார். ரமணாயனம் போன்ற மேலும் பல படைப்புகளை அவரிடமிருந்து எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். ஆயினும் அறுபத்தேழு அகவையிலேயே போதும் என்று நினைத்துப் புறப்பட்டு விட்டார் அவர். அவருக்கு ரமணோதயம் வெண்பா அஞ்சலி அளிக்கிறது.

வானமெனும் உள்ளத்தே அருள் வேய்ந்த மோஹன்
மோனத்தே சிறந்த நின் மொழியால் 'நான்' நீத்து
தொட்ட கவியெல்லாம் பொன்னாய் துலங்கிற்றே
பெற்றதே தமிழ் நின்னால் புகழ்.

# ரமணாயனம்

## க்ரேஸி மோஹன்

*பகவான் உவாச*

*நானென்றும் சொல்லி நினதென்றும் சொல்கிறாய்*
*நானிதில் யார்யார் நினக்குள்ளே காணதை*
*உன்னுள்ளே நோக்கி உழல்கின்ற உண்மையை*
*கண்ணுள்ளே காண்போனே கோன்....(293)*

*[நான், நீ என்று முன்னிலை, படர்க்கையில் கூறிக்கொண்டு இருக்கிறாயே! 'நான்' என்பது யார்? நீ என்பது யார்? என்பதை உனது உள்ளத்தே விசாரித்து அறிவாய். இந்த உண்மையினை ஞானக் கண் கொண்டு நோக்கினால் அறியலாம்.]*

*பாலுக்கும் தோழனாய் பூனைக்கும் காவலாய்*
*பாலுனக்கு பாடு புலன்களால் பாலதன்*
*பால்கலந்த தண்ணீரே பாழ்நான் உணர்வாய்யன்*
*பால்பிறக்கும் நானே பரம்....(294)*

*[பரம் என்னும் ஆத்மாவுக்கும், இகம் என்னும் உலக ஈர்ப்புக்களுக்கும் ஒரே சமயத்தில் பணி செய்ய இயலாது. ஞான சாதனையையும் உலக இன்பம் துய்த்தலையும் ஒரே சமயம் நிகழ்த்த இயலாது. அது வீணான முயற்சி என்பதை பால் கலந்த நீர் என்னும் உவமை கூறுகிறது. என்னை உணர்ந்து பரத்தின் மேல் செலுத்தும் அன்பினால் 'நானே அந்தப் பரம்' என உணரலாம்.]*

*தேடலின் தீவீரம் தீக்குச் சமமாகும்*
*சீடன் கரியா? வெடிமருந்தா? பாடது*
*முன்னதில் தேசிகர்க்கு மூளைவைத்தல் துர்லபம்*
*பின்னதில் பற்றல் பளிச்....(295)*

*[சீடரின் தகுதி பற்றிய பாடல். வெடிமருந்து போன்று உயரிய சீடனிடம் ஆசான் உபதேசம் உடனே பற்றிக்கொள்கிறது. கரிபோன்ற மந்த சீடனிடம் நிறைய முயற்சி தேவைப்படுகிறது.]*

*சரித்திரம் நேற்று, விசித்திரம் நாளை*
*நிரந்தரம் இன்றை நினைவாய் பரம்பொருள்*
*தாங்குவான் பாரங்கள் ஈங்கிதே சாரம்காண்*
*ஏங்குதல் ஏங்காமை ஏய்ப்பு....(296)*

*[Be in the now. கடந்தகாலம் பற்றியோ எதிர்கால எதிர்பார்ப்பக்களைப் பற்றியோ எண்ணிக் குழப்பத்தில் மாட்டிக் கொள்ளாதே. பூரண சரணாகதி செய்பவன் பாரங்களை பகவானே தாங்குவான்.]*

*யதாவுன் இருப்பு ததாயிவ் உலகு*
*கதாகனா வாகின்ற காட்சி சதாநீ*
*உனதுண்மை தேடு, உலகுக்கதன் பாடு*
*மனதின்மை காண்போன் மகான்....(297)*

*[யதா, ததா (எப்போது, அப்போது) என்பன சம்ஸ்கிருத சொற்கள். உனது இருப்புதான் உலகின் தோற்றம் உலகைப் பற்றிக் கவலைப்படாமல் உனது மெய்ம்மையைத் தேடுவாய். அப்போது மகான் ஆவாய்.]*

*புண்ணியநம் நாட்டில் புதைந்த ரகசியத்தை*
*கண்ணியவான் பால்பிரண்டன் கண்டுணர்ந்து*
*மண்ணுக்கு*
*புத்தகமாய் தந்தார் ,பகவான் ரமணரின்*
*தத்துவம் தொட்டதெட்டு திக்கு....(298)*

*[பால் பிரண்டனின் Search in Secret India நூலினால் பகவானின் மகத்துவம் உலகு எங்கனும் பரவியது.]*

*தவரச காண்டம்*

*சீதைக்(கு) இருப்பிடம் ஸ்ரீராமன் தங்குமிடம்*
*கீதைக்(கு) இருப்பிடம் கண்ணனே தாதையும்*

*கூடியிருந்து அன்பருடன் காகுத்தன் ராமனாய்*
*தேடிவந்தோர்(கு) ஊட்டினார்கீ தை....(299)*

*[(கீதாசாரத் தாலாட்டு பற்றிய பாடல்) அல்லது ரமண உபதேசமே மற்றொரு கீதை என்றும் பொருள் கொள்ளலாம்.]*

*பனியோ, குளிர்மழையோ பல்துலக்கும் நேரம்*
*தனியேவோர் பாறையில் தாவி கனிவாய்*
*சௌபாக்கியம்மா கீழிருந்து சாமியைக் காண*
*தவபாக் கியத்தார் தயவு....(300)*

*கண்கெட்ட பின்னுமேன் காணவந்தாய் என்னையென*
*பண்பட்ட சாமி பரிந்திட உன்பட்டு*
*பார்வை முதலியார் பாட்டியிவள் மேல்பட்டால்*
*தீர்வைத் தருமென்றாள் தாய்....(301)*

*[கண்பார்வையிழந்த முதலியார் பாட்டியிடம் "உனக்குத்தான் கண் தெரியாதே! ஏன் விழுந்தடித்துக்கொண்டு பகவானைப் பார்க்க ஓடுகிறாய்?" என்று கேட்டதற்கு "என்னால் அவரைப் பார்க்க முடியாவிட்டால் என்ன? அவர் பார்வை என்மீது விழுந்தால் எனக்கு ஜன்ம சாபல்யம்" என்றாள் பாட்டி.]*

*இந்தநேரம் பார்த்திந்த ஏழையிடம் ஏதுமில்லை*
*வந்தய்யர் நொந்தவண்ணம் வாடிட ''இந்தரோஷம்*
*சுந்தரேசா ஏனுனக்கு உந்தனையே நீயெனக்கு*
*தந்தபின்னும்'' என்றார் தவர்....(302)*

*[பகவானுக்கு அளிக்க என்னிடம் ஏதுமில்லை என வருந்திய சுந்தரேச ஐயரிடம், "உன்னையே எனக்குத் தந்துள்ளாயே! அதுவே போதும்" என்றார் பகவான்.]*

*தேசூரைச் சேர்ந்த துலுக்கப்பெண் தித்திப்பை*
*ஆசான்தன் அன்னைக்(கு) அளித்திட ஆசாரம்*
*போய்விடும் என்றுரைக்க '' பாரபட்சம் உண்டெனில்*
*போய்விடு'' என்றார்ஊர் பார்த்து....(303)*

*[ஜாதி, மத வித்தியாசம் பார்க்காதே என்று பகவான் அன்னைக்குக் கண்டிப்பாய்க் கூறிய நிகழ்ச்சி]*

*அரிசனமோ அன்றி அரசனோ அங்கு*
*தரிசனம் தந்தோர்க்குத் தன்னை சரிசமமாய்*
*காட்டுவார் ஆன்மீக காந்தியாம் கண்களால்*
*நீட்டுவார்நால் வர்ண நிழல்.... (304)*

*[எல்லோரும் ஒன்றே என்னும் பகவானின் சமரச நோக்கு.]*

*நேரெதிர் நிற்பவர் நினைவின்றி நெக்குருக*
*பாரதியார் பாடலைப் பாடிட நாரதர்கள்*
*கோளுரைக்க கோபித்துக், கூப்பிட்(டு) அருட்ப்ரகாசம்*
*பாலுரைத்தார் பாடப் பரிந்து....(305)*

*[பாரதியார் பாடலைப் பாடக்கூடாது என்று தடுத்த பாரிஷதர்களைக் கண்டித்து, 'பாடுங்கள்' என்று பகவான் உற்சாகம் அளித்தார்.]*

*ஆணென்ன பெண்ணென்ன ஆன்மீகப் பாற்கடலில்*
*ஜாணென்ன மைலென்ன சாந்தியாம் ஆன்மாவில்*
*பேதமற்று போனபின்பு ஏதுபால் ஆதலால்*
*ஓதலாம் பெண்களும் ஓம்....(306)*
*[இதுவும் அது.]*

*வாட்டியொரு வெள்ளைமூ தாட்டியிரு கால்களை*
*நீட்டிட கோபித்தார் நிர்வாகி காட்டினார்*
*சம்மணம் இட்டமர்ந்து, சட்டம் பொதுவென்று*
*தம்மடக்கு வாதத்தாள் தொட்டு....(307)*

*[பகவான் எதிரில் கால்நீட்டி அமர்ந்த மூதாட்டியை அன்பர் ஒருவர் கண்டித்தபோது, "சட்டம் எவ்வுயிர்க்கும் பொதுவன்றோ! நானும் சம்மணமிட்டே அமர்வேன் என்று, தனது வாதம் வலி தரும் காலை மடக்கி அமர்ந்தார் பகவான்.]*

*வந்தராஜ வாரிசு வந்தனித்தோர் சாதுவிடம்*
*தந்தகாசு கண்டு துடித்தவர் எந்தடா*
*பேறுபாயப் பிச்சை பெறவந்தோன் போட்டயிந்த*
*நூறுரூபாய் நோட்டு நகைப்பு....(308)*

*[பகவானின் ஆசிபெற வந்த இளவரசர் நிறைய பணம் தக்ஷிணையாய் தரவந்தது குறித்து பகவானின் முறுவல்]*

*அகப்பட்ட(து) ஆடு அபாயப் பாறை*
*முகப்புற்ற மாபிளவில் மாட்டி சுகப்ரும்மம்*
*அன்றந்த ஆடுபிடித்(து) ஆயுள் அதற்க்களந்தார்*
*நின்றழும் பெண்ணுக்காய் நேர்ந்து....(309)*

*[ஆட்டுக்குட்டி ஒன்று பாறைப் பிளவில் சிக்கிக் கொள்ள, ஆட்டுக்காரப் பெண்ணின் அழுகை கண்டு தானே மேலேறி, ஆட்டுக் குட்டியை மீட்டு வந்த அருட்செயல்.]*

*விதுரர் குடில்சென்ற விஷ்ணுகண்ணன் கூழை*
*சிதறாது நாலுகை சேர்த்து அதரத்தால்*
*உண்டாற்போல், ஆட்டிடையன் அன்போ(டு) அளித்ததை*
*மண்டியிட்டு உண்டார் மகான்....(310)*

*[விதுரன் வீட்டில் கண்ணன் சென்று அல்பமான உணவை உண்டதுபோல், ஆட்டு இடையன் தந்த கூழைக் குனிந்து கையால் வாங்கிக் குடித்தார் பகவான்.]*

*தீண்டாமை காலத்தில் தாயன்புக் கேணியர்*
*தோண்டியில் தண்ணீர் தளும்பிட வேண்டிடும்*
*புல்லறுக்கும் பெண்கள் புறமுதுகில் பெய்வாராம்*
*கொள்ளிரக்கம் கீழோர்பால் கொண்டு....(311)*

*[புல்லறுக்கும் கீழ்க் குலப்பெண்கள் வெயியில் வாடும்போது அவர்கள் முதுகில் குளிர்நீர் ஊற்றிக் குளிர்வித்தார் பகவான்.]*

*தானிருக்க முன்போர் திண்ணையும் கூரையும்*
*ஊணியப் பாட்டி உகந்ததோசைத் தீனியின்முன்*
*தேவா மிருதமும் தலைகுனியும் என்றாராம்*
*மூவா அவளன்பு மொக்கு....(312)*

*[ஆரம்ப காலத்தில் பாட்டி தந்த தோசையை பகவான் சிலாகித்தல்.]*

*பட்ஷணம் மேலல்ல பாட்டியிவள் பக்தியின்*
*லட்ஷணமே அன்பின் லஹரியென்றார் அஷ்ஷணமே*
*தின்றாராம் வேகாத தோசையை விண்டுவிண்டு*
*அன்றாயர் கண்ணனிவர் அன்பு....(313)*

*[கண்பார்வை குறைந்த பாட்டி அரைகுறையாய் வெந்த தோசையைக் கொணர்ந்தபோது, அதனைத் தானே விண்டு சாப்பிட்ட பகவானின் அருள், பக்தியை நோக்கியதே அன்றி சுவையை அல்ல.]*

*அம்பதாம் ஆண்டு அவரருணை வந்தநாள்*
*ரொம்பதான் பாரபட்சம் அன்பர்கள் உண்பதில்*
*சாப்பாடு கொள்வேன் சமபந்தி போஜனமாய்*
*சாப்பாடு வென்றவரின் சொல்....(314)*

*[பகவான் அருணை விஜயத்தில் சமபந்தி போஜனம் செய்ய அடியாரிடம் கூறுதல்.]*

*போளூர் நடேசன் பவுர்ணமி பட்ஷத்தில்*
*மாளூர் ஜெயித்தோர் முடியிறக்கும் நாளில்வெண்*
*கோவணம் மண்ணமர நாவிதர்நாற் காலியுற*
*ஓவியம் தீட்டவர்மா ஓடு....(315)*

*[பௌர்ணமி நாளில் நாவிதர் பகவானின் தலையில் மொட்டை அடிக்கும் அழகு.]*

*தமையந்தி நேரத்தில் தேடிவரு வோர்க்கும்*
*சமையல் செய்தன்னம் தூதாய் அமைய*
*நளபாகர், சிந்தைசூழ் 'நான்'சனி ஓட்டி*
*உளபாகம் தேற்றும் உணவு....(316)*

*[ஆசிரமத்தின் அணையாத பாகசாலை அக்னி]*

*அதிகாலை வேளை அடுப்படியில் வேலை*
*கொதிசாம்பார் கூட்டு கறிகாய் புதினாவில்*
*சட்டினி என்று சமையல் படிதாண்டா*
*பத்தினி யாம்பகவான் பார்....(317)*

*[அதிகாலையில் பகவான் பாகசாலையில் சமையல் பக்குவம் கூறுதல்]*

*தொப்பலாய் வேர்த்த தவத்திற்(கு) இதமாக*
*சுப்பரா மய்யா விசிறிவிட செப்பினார்*
*"காற்றுள்ள போதேநீ தூற்றிக்கொள் ஆன்மாவை*
*மாற்றமில்லா மாற்றதுவே மெய்''....(318)*

*[சுப்பராமய்யா வேர்த்துக் கொண்டிருக்கும் பகவானுக்கு விசிறிவிட, அதுவே உபதேசமாய் அமைதல்.]*

*இங்கிலாந்து கேரட்டும் இந்தியக் கத்திரியும்*
*எங்கு விளைந்தாலும் எந்தோட்டம் பொங்கலை*
*ஆழிசூழ் பூமியே ஆசிரமத் தோட்டம்தான்*
*வாழிய ஏக உணர்வு.... (319)*

*[ஆசிரம உணவின் சீர்மை.]*

*ஆக்கிய சாம்பாரில் தூக்கல் புளிப்பிருக்க*
*நாக்கில் ருசிபார்த்த நாயன்மார் வாக்குரைத்தார்*
*''எத்தைநாம் தின்றால்நம் பித்தம் தெளியுமென்று*
*ஒத்தைக்கால் நிற்போர்க்கு ஊத்து....(320)*

*[ஞான ரசம் அன்றி, உணவுச் சுவை நாடுபவர்க்கு பகவான் தரும் குட்டு.]*

*மீதமான மோர்நீரை மூடிடாத சாக்கிட்டு*
*போதுமென்றார் சமையலுள் பொல்லாப்பு ஏதுமிதில்*
*கோபமில்லை சாதுக்கு, கொள்ளுவதும் தள்ளுவதும்*
*ஆபரண மாட்டல் அவிழ்ப்பு....(321)*

*[எதற்குமே சினம் கொள்ளாத பகவானின் சிறப்புக்கு சமையற் கட்டிலிருந்தே உதாரணம்.]*


# பேரமைதி நிலவிய பெருநாட்கள்

## மூலம்: மௌனி சாது
## மொழிபெயர்ப்பு: ராம்மோஹறன்

### 13. பகவான் காட்டும் நேர்வழி

பெரும்பாலான குருமார்களையும் யோகிகளையும் போலன்றி, ஆத்ம ஞானத்திற்கு அடிப்படைத் தேவை யோகாப்யாஸம் பயிலுதல் என்று பகவான் ஒரு போதும் கூறுவதில்லை என்பதைக் கண்டோம். யோகாப்யாஸம் சார்ந்த கடினமான ஆஸனங்களையும் மூச்சுக் கட்டுப்பாடுகளையும் பிராண ஓட்டங்களை வசப்படுத்துதல் போன்ற எல்லாவற்றையும் ஆத்ம சாட்சாத்காரம் அடையத் தேவையற்றவை என்று ஒதுக்குகிறார். மிக அரிதாகத்தான் இவற்றைப் பற்றித் தன் உபதேசங்களில் குறிப்பிடுகிறார். பகவான் ஆத்ம சாட்சாத்காரத்துக்கு காட்டும் நேர்வழி. இத்தகைய யோகப் பயிற்சிகளைக் கருத்தும் கொள்வதில்லை. சரியான ஆசான் இன்றிச் செய்யப்படும் ஆசனப் பயிற்சிகள் உடல்நலக் கோளாறுக்கு வழி வகுக்கும் என்றும், செயற்கையான தியானப் பயிற்சிகள் பலன் தராது என்றும் பகவான் பகர்கிறார். ஆன்ம எழுச்சி துணை செய்தாலன்றி, இப் பயிற்சிகள் ஒருவனைக் குறிக்கோளை நோக்கி அழைத்துச் செல்லாது என்று ஸ்ரீசங்கரரும் விவேக சூடாமணியில் அறுதி இட்டுக் கூறுகிறார்.

இத்தகைய கடின பயிற்சிகள் ஒரு மனமயக்கத்துள் ஆழ்ந்துள்ள குழுவினரால் பின்பற்றப்படுபவையே என நான் உணர்ந்து கொண்டேன். முன்பு, பல்லாண்டுகளாக நானும் என் சகாக்களும் இத்தகைய வெளியோகங்களைப் பயின்று வந்தோம். (நான் இதை வெளியோகம் என்று குறிப்பிடுவது பகவான் காட்டும் நேர்வழியான 'மஹாயோகத்'தினின்றும்



வேறுபடுத்திக் காட்டவே 'வெளியோகம்' என்ற சொல்லைப் பயன்படுத்தி உள்ளேன்.) ஆனால் இதனால் எந்த ஒரு பயனும் இல்லை என உணர்ந்தேன். இந்த யோகப் பயிற்சிகளால் பலன் ஏற்படுகிறது என்பது உண்மையே. இதனால் நமக்கு நல்ல தேக ஆரோக்கியமும், மன அமைதியும் நல்ல குரல் வளமும் ஏற்படுகின்றது. ஆயினும் இந்த யோகப் பயிற்சிகளை தொடர்ந்து செய்து வரும் வரைதான் இந்தப் பலன்கள் நீடிக்கின்றன. இந்தப் பயிற்சிகளில் இருந்து ஒரு சில நாட்கள் மட்டுமே விலகி இருந்தால்கூட, பல நாட்கள் செலவழித்து நாம் செய்து வந்த யோகப் பயிற்சியின் பலன்கள் நம்மை விட்டு நீங்குகின்றன. இவற்றால் நமக்கு நிரந்தரமான மன அமைதி கிடைப்பதில்லை. இந்த மன அமைதி கிடைப்பதற்காக, தீவிரமான ஜப சாதனையைத் தொடர்ந்தேன். மிக உயர்ந்த மந்திரங்களைக் கொண்டு ஜபம் செய்து வந்தேன். புகழ்பெற்ற ஃப்ரெஞ்சு மறைபொருள் அறிஞரும் எழுத்தாளருமாய் இருந்து பின்னர் ஞானநெறிக்கு மாறிய பால் செடின் தனது 'தீக்ஷை' என்ற நூலில் கூறுகிறார், பல்லாண்டுகளாக இந்த மறைபொருள் தொடர்பான ஆய்வுகளில் இருந்து நான் என்ன கற்றுக் கொண்டேன்? எனக்கே புரியவில்லை.

பகவான் இன்னும் விவரமாகக் கூறுகிறார்: “விசார மார்க்கத்தைத் தவிர வேறு எந்த வழியினாலும் செய்யப்படும் மனக் கட்டுப்பாடு தாற்காலிகமானதே. அந்தத் துறைகள் சார்ந்த பயிற்சிகள் முடிவுற்ற பின் மனம் தனது வழக்கமான அலைதலுக்குத் திரும்பிவிடும் என்று கூறுகிறார். எது நமக்கு ஸ்வாபாவிகமான உண்மை இருப்போ, அது மட்டுமே நிரந்தரம். மற்றைய வழிகளால் அடையப்பெறும் சாந்தம் நிரந்தரமானதல்ல. எது நிரந்தரமில்லையோ, அதற்காகப் பாடுபடுவது பயனற்றது. பகுத்தறிவுள்ள எந்த மனிதனும் பகவானின் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்வான். அரைகுறையான முயற்சிகளால் ஆத்ம சாட்சாத்காரத்தை அடைய இயலாது என்பதை யார்தான் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்? இப்படி இருக்கும்போது, நமக்குக் கிடைத்துள்ள ஒரே உபகரணமாகிய விசாரத்தைப் பின்பற்றாமல் ஏனையவற்றில் நேரம் கழிப்பதால் ஏது பயன்? நமக்கு இருக்கும் கால அளவை மிகச் சிறிது. இதற்குள் நாம் ஆன்மிக முயற்சியில் வெற்றி பெற்றாக வேண்டும். கிழக்கத்திய மற்றும் மேற்கத்திய சாதகர் பலருக்கும் இத்தகைய மறைநிலைப் பயிற்சிகள் மிகக் கடினமாகவும், மிக்க நேரம் தேவைப்படுபவை ஆகவும் அமைகின்றன; இவற்றைச் செய்வதற்காக வாழ்வின் கால அட்டவணையை இலகுவாக மாற்றி அமைக்கத் தேவைப்படுகிறது. ஒரு சாமான்ய மனிதனின் வாழ்வில் இத்தகைய நூற்றுக்கணக்கான யோகப் பயிற்சிகளும் பிரார்த்தனைகளும், தியான முறைகளும் மிக அதிகமான நேரத்தையும், மற்றைய தேவைகளையும் எடுத்துக் கொள்கின்றன. தேவையான அளவு பணமும் பிற வசதிகளும் படைத்தவர்களால் மட்டுமே வெளியுலக வாழ்வை முற்றிலும் நீத்து துறவு வாழ்வைப் பின்பற்ற முடியும். இத்தகையவர்கள் மிகச் சிலரே. வாழ்வு நடத்த ஊதியம் தேடுபவர்களும், மற்றும் ஏனைய பெண்டிரும் இப்படி ஆன்மிக வாழ்வை நடத்த முற்படின் அவர்கள்

ஏனையோர்க்குப் பெரும் சுமையாய் அமைவர். கீழை நாடுகளிலாயினும் இத்தகையோர் பிட்சை எடுத்து வாழ்வு நடத்தலாம். மேலை நாடுகளில் இதுவும் இயலாது. அது சட்டவிரோதமும் ஆகும்.

பகவான் உபதேசிக்கும் விசார மார்க்கமோ மனப்பக்குவம் அடைந்த ஆணோ – பெண்ணோ, இளைஞரோ மூத்தவரோ, செல்வந்தரோ ஏழையோ, கற்றவரோ கல்லாதவரோ – அனைவருக்கும் ஏற்ற ஒன்றாகும். இந்தப் பாதையை ஏனையோர் கவனத்துக்கு வராமலேயே ஒருவனால் பின்பற்ற முடியும். இவன் ஓர் ஆழ்ந்த தேடலில் ஈடுபட்டுள்ளான் என்பதை வெளியுலகம், அறியும் வாய்ப்பே இல்லை. ஒரு மனிதனின் பிராரப்த கர்மத்தால் ஏற்படும் இடையூறுகள் வெகுவாகக் குறைக்கப்படுகின்றன. தாம் பிறர்க்கு உபதேசிக்கும் வழிமுறைகளைத் தாமே பின்பற்றாத வெற்று அறிஞர்களால் எழுதப்பட்டுள்ள பல்வேறு நூல்களையும் கற்கத் தேவை இல்லை. இந்த விசார மார்க்கத்தைப் பின்பற்றி உள்ள பொருள் (ஸத்) அறியும்போது, எல்லாமே அறியப்படுகின்றன. அந்த, உள்ளபொருளை அறியாதபோது நாம் நூல்கள் மூலம் காண்பதெல்லாம் இருளான அஞ்ஞானமே. இதைக்கொண்டு ஆத்மாவை அறிய முடியாது. எனவேதான், பயனற்ற அறிவை மனம் கொண்டு அறிந்து தேவையற்றவற்றை மூளையில் அடைத்துக்கொள்ளாமல் விசார மார்க்கத்தைப் பின்பற்றி பேரறிவைப் பெறுபவர் வெகுசிலரே. கடன் வாங்கிய அறிவால் பயன் ஏதுமில்லை. பிறர் ஒருவர் உண்பதைப் பார்த்துக்கொண்டு இருப்பதால் நமது வயிறு நிரம்பாது. நாம் உயிர் வாழ வேண்டும் எனில் நாம்தான் உண்ண வேண்டும்.

இந்த நூல்களில் தமக்குள்ளே ‘நான் பெரிது, நீ பெரிது’ என்று எதிர் வழக்காடும் பல்வேறு சமய கருத்துக்களும், எவ்வளவுதான் மறைக்கப்படினும் வெளியே தெரிகின்ற

அவர்தம் எதிர்மறை மனப்பாங்கும் இக்கருத்துக்கள் அனைத்துமே இறை உணர்வை அளிக்கமாட்டா என உறுதிப்படுத்தும். இவற்றில் நம்மை உய்விக்கும் ஞானம் கிடையாது என்பது தெள்ளெனத் தெரிகிறது.

பகவான் காட்டும் நேர்வழியோ எனில், நமது வாழ்வின் இறுதி மற்றும் ஒரே குறிக்கோளை வெளிச்சமிட்டுத் தெளிவாகக் காட்டுகிறது. வாழ்வின் நற்கூறுகளை (virtue) நாம் தேடிச் செல்ல வேண்டியது இல்லை. நாம் ஆன்மிக சாதனையில் முன்னேற முன்னேற அவையே நம்மை நாடி வருகின்றன. நாம் அனைவரும் எல்லாவற்றையும் விட முக்கியமாக அடையவேண்டிய ஆண்டவனின் சாம்ராஜ்யத்தைப் பற்றி ஏசு கிறிஸ்து, கூறுவது என் நினைவுக்கு வருகிறது. "நீங்கள் பிரதானமாக ஆண்டவன் ராஜ்யத்தை அடையும் வழியை நாடுங்கள். மற்றவை அனைத்தும் தாமே வந்து உம்மைச் சேரும்". எப்படி உலக விஷயங்களின் ஈர்ப்பிலிருந்து விடுபட முயல்வது பயன் அற்றதோ, அதேபோன்றே நற்கூறுகளை விரும்பி நாடிச் செல்வதும் பயனற்றதே. ஆம். ஒன்றிலிருந்து தப்பி ஓடுவதன் மூலம் அதை வெற்றி கொள்ள இயலாது. இடைவிடாத திறன் வாய்ந்த போரின் மூலமே அதனை வெற்றிகொள்ள இயலும். முக்கியமாக நாம் எதனுடன் அல்லது யாருடன் போரிடுகிறோம் என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும்; இல்லையென்றால் நாம் தோற்கடிக்கப் படுவோம். பகவான் காட்டும் நேர்வழி ஒன்று மட்டுமே நாம் எடுத்து வைக்கும் முதல் அடியில் இருந்து, நாம் எங்கே போகிறோம் என்பதையும் ஏன் போகிறோம் என்பதையும் தெளிவுறக் காட்டுகிறது. அந்நிலையில், நம்மைச் சூழ்ந்துள்ளவர்கள் அறியாமல் நாம் கொண்டுள்ள மனத்துறவு ஒரு இயற்கையான கற்பனையல்லாத உண்மை நிலையை அடைகிறது. அப்போதுதான், நம்மைச் சூழ்ந்துள்ளவற்றின் உண்மை நிலையை நாம் அறிகிறோம்.

இதைப் பற்றிச் சிந்திக்கும்போது, தற்போதைய யோகப் பயிற்சிகள் மற்றும் மறைபொருள் பற்றி நூல்கள் எழுதிய புகழ்பெற்ற ஆசிரியர் பலர் தாம் எதைப் பற்றி எழுதுகிறார்களோ அதைப்பற்றி முழுமையாக அறியாதவர்களாகவே உள்ளார்கள் என்பதைக் காண்கிறோம். தம்முடைய சீடர்களுக்கு தமது உடலையும் மனத்தையும் எங்ஙனம் கட்டுப்படுத்துவது என்று போதிக்கும் இவர்கள் தம் வாழ்வில் அத்தகைய கட்டுப்பாடுகளைக் கொள்ள இயலவில்லை. தாம் யோக முறையின் எல்லாத் துறைகளையும் அறிந்து, மனிதனின் ஆழ்மனச் சக்தியை எங்ஙனம் வெளிக்கொணர்வது என்பதை முற்றுமாய் அறிந்திருப்பதாக இவர்கள் கூறுகிறார்கள். ஆனால் அவர்களை நாம் ஒருமுறை பார்த்தாலே போதும் – அவர்கள் மனக் கட்டுப்பாடு மட்டுமல்ல, உடல் மற்றும் பொறிகள் மீது கூட சற்றும் கட்டுப்பாடு பெறவில்லை என்பதைக் காண்கிறோம். நூல்களை எழுதுவது சுலபம்; பேரறிவை அடைவது மிகக் கடினம். "வைத்யனே! முதலில் உன்னையே குணப்படுத்திக்கொள்! என்பதே என் நினைவுக்கு வருகிறது.

ஏராளமான மக்கள், பகவானின் நேர்வழியை அறியாமல், இத்தகைய பயனற்ற பாதைகளைப் பின்பற்றுகிறார்கள் என்பதை நான் அறிவேன். எல்லாப் பாதைகளும் ஒரே லட்சியத்தை நோக்கித்தான் அழைத்துச் செல்கின்றன என்பது உண்மைதான். எனினும் நாம் ஐயத்திற்குரிய வழிமுறைகளைப் பின்பற்றும்போது காலம் கடந்து விடுகிறதே!

நம்மிடம் ஒரு வேகமாகச் செல்லும் மோட்டார் கார் இருக்கும்போது, ஒரு மாட்டு வண்டியில் பயணிப்போமா! அதேசமயம் இத்தகைய மெதுவாகச் செல்லும் ஊர்தி, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக உபயோகத்தில் உள்ளது என்பதும் இப்போதும்கூட

கிராமவாசிகட்கு மிகவும் பயன்படுகிறது என்பது உண்மைதான். எனவே, அவரவர் தேவைக்கு ஏற்றபடி, அப்போதைக்கு ஏற்றபடி அவற்றின் பயன்பாடு உள்ளது என்பதும் உண்மைதான்.

இப்போது என் சூழ்நிலை மாறிவிட்டது. நமக்கு எந்த ஒரு நூற்படிப்பும் தேவையில்லை. எல்லா ஞானத்திற்குமான ஊற்றுக்கண், போதவடிவு என் கண்முன்னே இங்கே அமர்ந்துள்ளது. இந்தப் பெரும் வாய்ப்பு ஒரு சிலருக்கே கிடைக்கும். ஆயினும், இந்த மஹான் வழங்கும் மாபெரும் ஞானப் பொழிவை ஒடுக்கும் சக்தி யாருக்குமே, எதற்குமே இல்லை யல்லவா?

என்னுடைய ப்ரக்ஞையில் மற்றொரு மஹான் வழங்கிய உபதேசம் ஒலிக்கிறது. "நானே வழி; நானே சத்யம்; நானே உயிர்: என் வழியாலன்றி உலகப் பிதாவை அடைய எவராலும் இயலாது". பகவானின் சந்நிதியில் இந்தப் பேருண்மை உயிர் பெற்று ஒளிர்கிறது. பகவான் திருமுன்னர் அவர் நிழலில் "அவரே வழி" என்பதை நான் உணர்கிறேன்.

பகவானின் நேர்வழி புத்தர் காட்டும் பெருநெறியையும் முற்றுவிக்கிறது. "வேறொரு பொய்ம்மையை அதனிடத்தில் ஸ்தாபிப்பதன் மூலம் அந்தப் பொய்ம்மையை நீ அழிக்கமுடியாது". பொய்ம்மையை அழிக்கும் சத்யமான பெரும் சக்தி, என்முன்னே இப்போது ஆசனத்தில் அமர்ந்துள்ளது.

பகவானின் இந்த ஞானக் கதிர்வீச்சில் திளைத்தவர் எவரும், வெளிப்படையாகத் தோன்றும் இப்பொய்மை உலகினை மெய்யென நம்ப மாட்டார்கள். ஆயினும் தத்துவரீதியாக இதை அறிதலும், அதையே அப்யாஸபூர்வமாக வாழ்க்கையில் வெவ்வேறுபட்டவை. இது ஒரு சிலர்க்கே சத்யமாகிறது. மீண்டும் ஒரு நினைவு தோன்றுகிறது. திபெத்ய

புத்தசமயம் சார்ந்த நூலான, ப்ளாவட்ஸ்கியினால் எழுதப்பட்ட "மௌனத்தின் குரல்" என்ற நூலில் அவர் கூறுகிறார்: "பௌதிக ரீதியான ஆன்மாவும் சித்ஸ்வரூபமான ஆன்மாவும் எப்பொழுதும் சாதிக்க இயலாது. ஏதேனும் ஒன்று மறைந்துதான் தீரவேண்டும். இரண்டும் ஒரே இடத்தில் இருப்பது சாத்யமே இல்லை." பகவான் காட்டும் நேர்வழியும் இதனையே கூறுகிறது.

பகவான் ஒன்றே ஒன்றான ப்ரம்மன் மட்டுமே உண்மையான ஒன்று என்று பறையறையும் அத்வைத வேதாந்தத்தை ஏற்றுக் கொள்கிறார். சங்கரரும் விவேகசூடாமணியில் இதையே மொழிகிறார். "நம் மனத்தாலும் வாக்காலும் அறியப்படும் இந்த அகிலம் முழுதும் ப்ரம்ம மயமே." இந்தத் தத்துவத்தின் ஆணிவேரை நாம் நாடிச்சென்றால், மனிதனின் நிரந்தரமற்ற பௌதிகப் பகுதி இல்லாத ஒன்றே என்பதைக் காண்கிறோம். நாம் முன்பு கண்ட "மௌனத்தின் குரல்" நூலில் கூறப்பட்டதற்கு பல்லாண்டுகட்கு முன்னமேயே அத்வைத வேதாந்தம், அஹங்காரம் மற்றும் அதன் முப்புடிகள் அனைத்துமே ஆதாரமற்ற பொய்ம்மை என்பதை அறிகிறோம்.

இப்போது, பல்வேறு தத்துவக் கருத்துக்களால் குழம்பிக்கிடந்த என் மனச் சஞ்சலத்தினின்றும் விடுபட்டு எல்லாவற்றிற்கும் அடிப்படையான அத்வைத தத்துவத்திற்கு வந்துவிட்டேன். இது அனைத்துக் கேள்விகளையும் அடியோடு அழிக்கிறது. இதன்மூலம் நான் இதுநாள்வரை தேடிவந்த சாந்த நிலையை அடைந்தேன். பகவான் கூறும் நேர்வழி எங்ஙனம் பல்வேறு குழப்பம் நிறைந்த என் முன்னாள் அப்யாஸங்களில் இருந்து முற்றிலும் வேறுபட்டு நேராக ஸாயுஜ்யம் நோக்கி அழைத்துச் செல்கின்றது என்பதை உணர்ந்தேன்.

நமது லட்சியத்திற்கு அழைத்துச்செல்ல ஒரு சரியான பாதை உள்ளது என்று நாம் அறியும்போது நமது உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கி எழுகின்றது. இதுவே நமது ஆன்மிக தாகத்தைத் தீர்க்கும் ஜீவநதி. மனித சமுதாயம் தனது தேடுதலிலும் சிக்கல்களிலும் மாட்டிக்கொண்டு தடுமாறும்போது, எப்போதுமே ஒரு ஔஷதமோ, உதவியோ கிடைக்காமல் போவதில்லை. தேடுபவர்கள் நிச்சயம் கண்டறிவார்கள். ஆயினும் அந்தத் தேடுதல் மிக உயர்ந்த லட்சியத்திற்காக அன்றி, அற்பப் பொருளைத் தேடுவதாக அமைந்து விடக்கூடாது. இந்தத் தேடலில் “நித்யா நித்ய வஸ்து விவேகம்’ ஒரு சக்திவாய்ந்த கருவியாக அமைகிறது. இந்த ஞானத்தை அடையும் நேர்வழி நமக்கு முன் விரியும்போது நாம் இதுவரை தேடாதிருப்பதுபோல மற்றக் குறிக்கோள்கள் அனைத்தும் மறைகின்றன. சீடன் இவற்றை ஒதுக்கித் தள்ளவேண்டிய தேவையேயில்லை. சீடன் எது மறக்கப்பட வேண்டியதோ அதை முற்றிலும் மறந்து, எது ஞாபகத்தில் இருக்க வேண்டுமோ அதை மட்டுமே நினைவில் வைத்துக் கொள்கிறான்.

நமது பகவான் நமக்கு அடிக்கடி சுட்டிக்காட்டுகின்ற நமது இதயத்தின் ஆழத்தில் ஓர் ஆன்மிக சக்தி அடங்கி உள்ளது. இது வட்டத்தின் மையம் போன்று அமைந்துள்ளது. இம்மையத்தில் இருந்து அனைத்தையும் நாம் கண்கூடாகக் காண்கிறோம். இந்த மையத்தில் இருந்து அன்றி, வேறு எங்கிருந்தும் அனைத்தையும் காணமுடியாது. பகவான் காட்டும் வழி ஏன் உண்முக மௌனத்தின் பாதை என்றும் அழைக்கப்படுகின்றது என்று இப்போதுதான் புரிகிறது. இருக்கும் ஒரே பொருளான ‘காண்பான்’ யாருடன் பேசமுடியும்? நேராக நமது ஆன்மிக மையத்தில் உள்ள அனைத்து சக்திகளின் மூலத்தை நோக்கிச் செல்லுங்கள். இந்த மௌனத்தின் ஆன்மிக மையம் என்பது நம் இதயஸ்தானமே. கணிதத்தின் அடிப்படை விதி கூறுவதுபோல இரண்டு

*புள்ளிகட்கு இடையே உள்ள மிகக் குறைந்த தூரம் ஒரு நேர்க்கோடே ஆகும். இதை ஏற்றுக்கொண்டால் நேர்வழி உங்கள் காலடியிலேயே உள்ளது. அதை வேறு எங்குமே தேடவேண்டாம். பல்லாயிரக்கணக்கான மைல்களைப் பயணிக்கும் பிரயாணம் நாம் முதலில் எடுத்து வைக்கும் சிற்றடியால்தான் துவங்குகிறது. இந்தச் சிற்றடியை எடுத்து வைக்காவிட்டால் பிரயாணமே துவங்காதல்லவா?*

*'நான் யார்?' என்பதை அறியும்வரை, நாம் ஆன்மிகப் பயணத்தில் செயல்பட முடியாது. இப்போதேயோ, அன்றி சிலகாலம் கழிந்த பின்னரோ, நமது ஆன்மிகப் பயணத்தைத் துவங்கி, நம்முடைய முந்தைய குறிக்கோளற்ற அலைக்கழிப்பை மறக்கவேண்டும்.*

*நேர்வழி எனப்படும் விசார மார்க்கத்தை எல்லையற்ற 'நிர்வாணம்' எனப்படும் சாகரத்தில் கம்பீரமாகப் பாய்கின்ற நதிக்கு ஒப்பிடலாம். ப்ரம்மம் அல்லது ஆன்மிக சாம்ராஜ்யம், துறக்கம் என்று எப்பேரில் அழைக்கப்பட்டாலும் சரி, இதுவே அனைத்திற்கும் லட்சியம். பல்வேறு யோகங்கள், சமயங்கள், தத்துவ தர்ஸனங்கள், மறைநிலைப் பயிற்சிகள், ஆன்மிக சங்கரங்கள் இவை அனைத்துமே இந்தப் பேராற்றில் சங்கமிக்கும் சிற்றோடைகள்; இதன்பின் அனைத்துமே அந்த ஆத்மிக சாகரத்தில் சங்கமிக்கின்றன. ஆயினும், இந்தச் சிற்றோடைகள் ஆத்மவிசாரம் என்னும் பேராற்றில் கலந்து ஒன்றாகாதவரை இந்தச் சிற்றாறுகள் ஆத்ம சாட்சாத்காரத்தை அடைந்து ஒன்றாகப் பயன்படுவதில்லை. அந்தப் பேராற்றை அடையும்வரை அவற்றின் போக்கில் குறுக்கிடும் அருவிகள் மணல் திட்டுகள் மற்றும் பல இடையூறுகள் அவற்றின் போக்கை மாற்றலாம். இந்தச் சிற்றாறுகளிலேயே பயணம் செய்து கொண்டிருக்கும்வரை, அவை முன்னே செல்ல வேண்டியுள்ள பாதையில் மறைந்திருக்கும் பேராற்றினை நாம் காண இயலாது. நாம் முன்னேறிச் செல்லச்*

*செல்ல, நமக்கு நாம் அடைய வேண்டிய தீரத்தின் தொலைக்காட்சியும் ஏனைய தொலைவில் இருக்கும் பொருட்களும் தெரிய வருகின்றன. எல்லாவற்றிற்குமே ஒரு முடிவு உள்ளது என்பதை நாம் உணர முற்படுவதில்லை. நாம் செல்லும் உப பாதைகட்கும் ஒரு முடிவு உண்டு. பகவான் கூறும் நேர்வழியைப் பற்றி அறிந்தவர்கள், இந்த உப பாதைகளில் பயணித்துத் தம் நேரத்தை வீணடிக்க மாட்டார்கள். சாகரத்தை நோக்கி நேராகச் செல்லும் பேராற்றினை எங்ஙனம் அடைந்து சாகரம் நோக்கிப் பயணிப்பது என்பது ஒன்று அவர்தம் குறிக்கோளாக அமைகிறது.*

*ஒருவேளை இம்மனிதர்கள் கோணல் மாணலான இந்த உபபாதைகளில் முற்பிறவிகளில் பயணித்திருக்கலாம். அந்தப் பூர்வ ஜன்ம அனுபவம் இப்போது அவர்களை நேர்வழி என்னும் ராஜ பாட்டைக்கு அழைத்துச் செல்லலாம். உபபாதைகள் எவற்றிலும் அவர்கட்கு நாட்டமில்லை. ஒவ்வொரு காலத்திலும் மார்க்கபந்துவான மஹான் ஒருவர் தமது கப்பலுடன் அந்தப் பேராற்றில் பயணித்து வருகிறார். சிற்றாறுகளிலும் உபநதிகளிலும் தம் பயணத்தை முடித்து இப்போது பேராற்றில் தம் வருகைக்காகக் காத்திருக்கும் சாதகர்களைக் காண்கிறார். லட்சியத்தை அடையும் தமது இறுதிப் பயணத்திற்காக அவர்கள் காத்திருக்கின்றனர்.*

*அவர்களிலிருந்து பக்குவிகள் எவரோ அவரைத் தேர்ந்தெடுத்து தமது காலத்தில் மார்க்கபந்து ஏற்றிக் கொள்கிறார். எல்லையற்ற ஒன்றில் அந்தக் கலம் சென்று மறைகின்றது.*

*கண்ணுக்குத் தெரியாத இந்தக்கலம், நாம் காண்பதற்காக இன்னும் பயணிக்கின்றது. அதன் தலைவன் நம்மைத் தன்னுடன் அழைத்துச் செல்ல ஆயத்தமாக உள்ளான்.*

# இக்காலத் தேவை

## வீரராகவன்

*கவியோகி சுத்தானந்த பாரதி அவர்கள், ஆன்மிக ஆழம் கொண்ட குடும்பத்தில் 1897-ஆம் ஆண்டு அவதரித்தவர். இந்திய அரசியல் சுதந்திரத்திற்காக அரும்பாடுபட்டவர்; ஆழ்ந்த ஆன்மிக தாகம், பாராட்டக்கூடிய பன்முக மேடைப் பேச்சுத் திறமை என்று அவரது அறிவாற்றல்களைப் பற்றி ஒரு நீண்ட பட்டியல் தயாரிக்கலாம். முதியோர் கல்வி, பன்முக சமூக சேவை, ஹரிஜன மேம்பாடு என்பது போன்ற அவரது செயல்களையும் விவரித்துக் கொண்டே போகலாம். ஜபம், பிராணாயாமம், ஹடயோக சாதனை என பற்பல ஆன்மிக சாதனைகளிலும் ஆழ்ந்த ஈடுபாடு உள்ளவர். பௌத்தம், இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ மதநூல்களையும் ஆழ்ந்து கற்றவர். ஒருமுறை நெரூர் சதாசிவ பிரம்மேந்திரர் சமாதித் தலத்தில் தவமேற்கொண்டிருக்கையில் பகவான் ரமண மகரிஷிகளின் புகைப்படத்தைக் காண நேர்ந்தபோது உடனே பகவானிடம் ஈடுபாடு கொண்டதோடு பின்னர் 'ஸ்ரீ ரமண விஜயம்' என்ற தமிழ்ப் புத்தகாசிரியராகவும் பேறு பெற்றவர். 1932-ஆம் ஆண்டு வெளிவந்த இந்த நூல் பகவானின் வாழ்க்கையையும் உபதேசத்தையும் தெளிவாக எடுத்துரைத்த முதல்நூல். தனது முதல் ரமண தரிசனத்தைப் பற்றி அவரே இந்நூலில் விவரிப்பதன் சுருக்கம்:*

*முதன்முதலில் பகவானுடைய புகைப்படத்தைக் கண்டவுடன் ஒரு மன உறவு ஏற்பட்டது. தமிழ்க் குருகுலத்தில் இருந்தபோது, ரமணாச்ரம சீடர் ஒருவர்*

அங்கு வந்து சேர நேர்ந்தது. தினம் சுமார் அரைமணி நேரமாவது மகரிஷிகளைப் பற்றி அவரிடம் வினாவி அறிவது ஆறுதல் அளித்தது. நானாரென்னும் ரமண வித்தையையும் பயிலத் தொடங்கியது. மைசூரில் இருந்தபோது ஒருநாள், மகரிஷிகளை உடனே காணாவிடில் உயிர் நிலைக்காது எனும்படி கடும்பசி யெடுக்கவே, திருவண்ணாமலைக்குப் புறப்பட்டது. அரசியல் நண்பர் வீட்டில் சாமான்களை வைத்துவிட்டு மலையை நோக்கி மீப்பாய்ந்து, பகவான் வசித்திருந்த இடங்கள் குகைகளைக் கண்டதும் வெட்கமும், ஆதம் வீரமும் மனத்தைக் கவர்ந்தன. அந்தோ! வாழ்வை வீணாக்கினோம்! நிலை தெரியாது அலைந்தென்ன பயன்? தன்னையறியாது பிறருக்கு அறிவு புகட்டும் மடமையினும் மடமை வேறில்லை என்று ஆவி குமுறி கண்ணீர் அருவி பொழிந்தது. பின்னர் ரமணாச்ரமத்திற்குச் சென்றதும் கணபதி முனிவர் வழிகாட்ட அங்கு கண்டதென்ன! மனித வடிவல்ல! முற்றும் ஓர் ஜோதிப் பிழம்பு! பிறகே கைகால்களை மடித்து உட்கார்ந்து, இதையாட் கொண்ட பகவான், இதன் வணக்கங்களையும் எதிர்பாராது, பாரதியா! பாரதசக்தி எழுதியிருக்கிறார் என்றவுடன் இது மூர்ச்சையானது. ஆனந்தம்! மொழியுமுன்னே இதன் வரலாற்றையும் அறிந்து பல்லாண்டுகள் பழகிய நண்பரைப் போல் உறவாடுகிறார். இதன் ஆயுளில் இத்துணை தூய அன்பை யார்பாலுங் கண்டதில்லை.

'தி மௌண்டன்பாத்' என்ற காலாண்டுப் பத்திரிகையை ஸ்ரீ ரமணாச்ரமம் தொடங்கு முன்னர், 1950 களில் மும்பையில் பல ரமண பக்தர்கள் ஒன்று சேர்ந்து 'Call Divine' (தெய்வீக அழைப்பு) என்ற பத்திரிகையைத் தொடங்கி நடத்தி வந்தனர். சுத்தானந்த பாரதி அவர்களும் ஆசிரியராக இருந்த இந்த பத்திரிகையின் 1953 ஜூலை இதழில் இவர் எழுதியுள்ள Need of the Hour (இக்காலத் தேவை) என்ற கட்டுரை

அவரது ரமண தரிசனம் மற்றும் ரமணோபதேசத்தை தெளிவாகவும் சுருக்கமாகவும் விளக்குவதால் அதன் தமிழாக்கம் இங்கு கொடுக்கப்பட்டுள்ளது.

“எனது கடைசி அரசியல் பிரசங்கம் சிதம்பரனார் தலைமையில், தூத்துக்குடியில், வட்டக்கிணறு மைதானத்தில் மாபெருங் கூட்டத்தில் நிகழ்ந்தது. நான் பேச வேண்டிய தலைப்பு அரசியல் (சுதந்திர எழுச்சி) ஆயினும் நான் பேசியதோ சமயம், மற்றும் தெய்வப் பற்று பற்றியதாகும். அப்போது எனது கண்களில் கண்ணீர் தாரை பெருகியது. ‘இந்தியா, பூகோளத்திற்கு உட்பட்ட ஒரு நிலமல்ல. தெய்வீக சக்தியின் கருவூலமே இந்தியா. இதுவே நான் விவரிக்க விரும்பிய பாரத சக்தி. இதுவே தெய்வ சக்தியின் மூலஸ்தானம். இதுவே சர்வ வல்லமையுள்ள ஜீவசக்தி. எனவே இந்தியா விரைவில் சுதந்திரமடையும். ஆன்மிக இந்தியா எப்போதும் சுதந்திரமாகவே உள்ளது. ஆத்ம சக்தியின்மூலம், பௌதிக எல்லைக்கு உட்பட்டுள்ள இந்தியாவும் விரைவில் சுதந்திரத்தை அடையும். கூட்டு பிரார்த்தனை, தியான முறைகளைத் துவக்குங்கள். உங்களது ஜீவனை, யோக அப்யாசங்களால் சுத்திகரித்து விளக்கம் பெறச் செய்யுங்கள். தெய்வீக சக்தி, ஆற்றல்களை எங்கும் பரவச் செய்யுங்கள். நமது உபநிஷத் தத்துவங்களையும் எங்கும் பரவச் செய்யுங்கள். இத்தகைய எண்ண அலைகள் ஜன சமூகத்தை நிச்சயமாக மேம்பாடடையச் செய்யும். ஒரு மௌன ஞானியின் மௌன சக்தி மறைமுகமாக இந்தியாவின் தலைவிதியை நிர்ணயிப்பதில் வேலை செய்து வருகிறது.’

“இதைப்பற்றிய தெளிவான காட்சியும் எனக்குக் கிடைத்தது. பிரசங்க மேடையிலிருந்து இறங்கியவுடன் தனியறையில் ஒருநாள் முழுவதும் தியானத்தில் இருந்தபோது இது மேலும் ஊர்ஜிதமானது. காவ்ய கண்ட கணபதி சாஸ்திரிக்கு எழுதிய

கடிதத்தில் இக்காலத் தேவை (need of the hour) யோக அப்பியாசமும் நம்முள் ஆன்ம சக்தியை ரகசியமாக வளர்த்துக் கொள்வதுமேயாகும் என்று குறிப்பிட்டிருந்தேன். இதன் தொடர்பாக மகரிஷி ரமண அருணகிரியின் ஜோதி தரிசனமும் கிடைத்தது. எனது சிற்சில அரசியல் வேலைகளை உடனே முடித்துக் கொண்டு மகரிஷிகளிடம் விரைந்தோடினேன். இம்முறை கணபதி முனிவரே என்னை பகவானருகில் அழைத்துச் சென்றார். பகவான் ரமணரது சந்நிதியில் அமர்ந்தவுடன் ஆழ்ந்த தியானத்தில் மூழ்கினேன். இந்தியா, சுதந்திரம், ஸ்வராஜ்யம், இக்காலத் தேவையும்கூட மறைந்தன. ஒருமணி நேரம் கடந்தது. கணபதி முனிவர், என்னை மெல்ல தட்டியெழுப்பி நான் அவருக்கு எழுதிய தற்கால உடனடித் தேவையைப் பற்றி பகவானிடம் வினவலானார். ஆழ்ந்த அமைதியான சில நிமிடங்களுக்குப் பிறகு பகவான் பதிலளித்தார். The need of the Hour is to feel no need at all, but to heed what is within and search இக்காலத் தேவை என்னவென்றால் தேவையென்பது ஒன்றுமே இல்லை என்பதை உணர்ந்து நம்முள் ஒளிரும் வஸ்துவின் மீது கவனம் செலுத்தி அதை ஆய்ந்து அறிவதேயாகும்."

இருப்பதாக நம்பப்பட்ட இக்கால உடனடித் தேவை என்பதே தேவையற்றது என்பது சொல்லாமலே விளங்கும். பகவான் நமக்கு விடுக்கும் அறைகூவல் இதுவே! தானாய் ஒளிர்வதாகிய அந்த ஆன்மாவின்மீது இடைவிடா கவனம் செலுத்தி, அதை விசாரித்து அறிவதே ஆகும். இந்த அறைகூவலை மக்களுக்கு எடுத்துச் சென்ற தெய்வ தூதரில் தலையாய ஒருவர் கவியோகி சுத்தானந்த பாரதி ஆவார்.

# சும்மாயிரு சுகம் உனக்கே

**சு.பரமேஸ்வரன்**

தமிழகத்தில் தோன்றிய எல்லா சித்தர்களும், ஞானிகளும் சும்மாயிரு என்ற சொல்லாடலை தமது பாடல்களில் ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளனர். மௌனம் என்ற மெய்யுணர்விற்கு தமிழ் சித்தர்கள் வழங்கியுள்ள குறியீடு சும்மா என்பதாகும். சும்மாயிரு என்ற முடிவான நிலையை குறிப்பிடுகிறது வேதாந்தம். சோம்பேறிகளின் முடிவும் சும்மா இருப்பதுதான். சும்மா இருப்பதால் என்ன பயன்? அது முற்றிலும் சோம்பேறித்தனமாகி விடாதா? எனில்

சும்மா இருக்க சுகம், சுகம் என சுருதியெல்லாம் அம்மா
நிரந்தரஞ் சொல்லவுங் கேட்டும்;
அறிவின்றியே பெம்மான் மவுனி மொழியையுந் தப்பி;
என் பேதமையால் வெம்மாயக்காட்டில் அலைந்தேனே!
அந்தோ என் விதி வசமே

என்பார் தாயுமானவர்.

இகவாழ்க்கையில் வெறுப்புற்று உயிரை மாய்த்துக் கொள்ள அருணகிரியார் கோபுரத்திலிருந்து குதித்தார்; முருகனின் மயிலின் மேல் கண் விழித்தார். அருணகிரியாரை அருட்கண்ணாலே வாழவைத்தார் முருகப்பெருமான்.

சும்மாயிரு! சொல்லற என்றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே

- கந்தர் அனுநிதி

முருகப் பெருமான் உபதேசப் பொருள் அறிய முடியவில்லையாம்! காலச்சக்கரம் சுழல்கின்றது 500 ஆண்டுகளுக்குப் பின் அருணகிரியார் எங்கு அமர்ந்து

*முருகனின் உபதேசம் பெற்றாரோ அதற்கு 100 அடி தூரத்தில் உள்ள பாதாளலிங்க சந்நிதியில் அந்தப் பரம்பொருளே மானுடக்கோலங்கொண்டு நம்மை உய்விக்க பாலரமணராய் நிர்விகல்ப சமாதியில் அமர்ந்திருந்தது விந்தையிலும் விந்தையன்றோ?.*

*கண்ணுடைய வள்ளலார் தனது குருவான காழிஞானசம்மந்தப் பெருமானிடம், உபதேசம் கேட்க, அவர் மூன்று முறை ஆணையிட்டு சொல்வதைக் கேட்போமா?*

***என்னாணை, என்னாணை, என்னாணை, ஏகம் இரண்டு***
***என்று எண்ணாமற், சும்மாயிரு என்றான்***
***திருஞான சம்பந்தன் சீர்காழி நாடன் ஞானவினோதன்***

**- ஒழிவில் ஒடுக்கம்**

*பாடலின் விளக்கம்: எதையும் எண்ணாமல் சும்மாயிரு என்றார் மனதில் யாதொரு நினைப்பும் இல்லாது இருக்க வேண்டுமாம். எதை எண்ணாமல்? என்ற வினாவிற்கு இரண்டு பொருள்கள் உள்ள இரட்டைகளை நன்மை, தீமை, சுகம், துக்கம், பாவ, புண்ணியம் முதலிய இரட்டைகளை விட்டு சிந்தனையற்று சும்மாயிரு என அருளினார். துவித நிலையும் எண்ணுதே ஒன்று என்பதும் இல்லை. எனவே ஏகம் இரண்டும் எண்ணாமல் சும்மாயிரு என்றருளிச் செய்தார் கண்ணுடைய வள்ளலார்.*

***சும்மா இருக்க வைத்தான் சூத்திரத்தை நானறியேன்***
***அம்மா பொருளிதென அடைய விழுங்கினுன்டி***

*என்பார் பட்டினத்தார்.*

*பொருள் ஒன்றும் அறிந்திலனே என்பது என்ன?*

*சொல்லற்ற இடத்தில் பொருள் எது? கண்டவர் யார்? காண்பான், காட்சி, பொருள் மூன்றும் அற்ற இடமன்றோ அந்த மோன நிலை அதுகுறித்தே அவ்வைப்பாட்டியும்,*

மோனம் என்பது ஞானவரம்பு

என்றாள்.

இங்கே தமிழ் தெய்வநிலை பெறுகிறது. ஞானத்திற்கு எல்லையாக இருப்பது மௌனம். எல்லாவித சமயசாதனங்களும், யோகங்களும் முடிவில் மௌனத்தை சும்மா இருக்கும் நிலையையே எடுத்துரைக்கும்.

பெரியோர்கள் நுட்பமாகக் கூறிய அனுபவ சொல்லாடலை சாதாரண பாமர மக்களும் இந்த சும்மா என்ற சொல்லை பலவகையான பொருள்களில் வெளிப்படுத்துகிறோம்.

1. வேலை இல்லாமல் இருப்பது என்ற பொருளில்,
   ஏனுங்க, பையன் வேலைக்கு போகுதா?
   இல்லீங்க சும்மாதான் இருக்கான்.

2. இலவசம் என்ற பொருளில்,
   இது என்ன விலைக்கு வாங்கினே?
   விலைக்கு வாங்கவில்லை, சும்மா கிடைத்தது.

3. வெறுமையாக, காலியாக உள்ளது என்ற பொருளில்,
   என்னஙக வீட்டுக்கு ஆள் வந்தாச்சா?
   இல்லை சும்மாதான் கிடக்குது.

4. பயன்படுத்தப்படாமல் உள்ளது என்ற பொருளில்,
   சும்மாகிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி

இது போன்று பல்வேறு பொருள்களில் சும்மா என்ற சொல் அன்றாட வாழ்வில் தமிழர்களிடையே பேச்சு மொழியாக இருப்பதை காணலாம்.

மனித மன ஆற்றலினால் சித்திகள் பெற்று நீர்மேல் நடத்தல், பிறர் மன எண்ணம் அறிதல், கூடு விட்டு கூடு பாய்தல் என எல்லா சித்துக்களும் செய்வது எளிது. ஆனால், சிந்தையை அடக்கி சும்மா இருக்கும் திறம் ஒன்றே அமுதினும் அமுது என்பார் தாயுமானவர். சித்தர்கள் கூறிய சொல் அறியாமையால் விளைகின்ற வாக்கு

மௌனம் அன்று. அது சொல்லாலும், பொருளாலும், அளவையாலும் தொடர ஒண்ணா அருள்நெறி.

உரையற்ற ஒன்றை உரை செய்யும் ஊமர்காள்
கரையற்ற ஒன்றைக் கரை காணலாகுமா?

எவ்வகையாலும் வெளிப்படுத்தமுடியாத ஒன்றை ஊமைகள் விளக்க முடியுமா? என்பார் திருமூலர். மோனம் (Aloness) என்பது மெய்மையின் வரையறுக்கமுடியாத நிலையைப் பற்றிய ஒரு வெளிப்பாடு 'சும்மா' என்பது. பேச்சற்ற பேரின்பத்தின் குறியீடு.

இனிது இனிது ஏகாந்தம் இனிது

என்பார் அவ்வை.

அங்கு எல்லா வேறுபாடுகளும், எல்லைக்கோடுகளும் மறைந்து விடுகிறது. ஒருமை பற்றிய பேரின்ப உணர்வு நிலை. பகவான் ரமணரின் மொழியில் சொல்வதானல்

மோனம் என்பது இடையறாய் பேச்சு
இதயம் பேசுகின்ற மோன மொழி.

முடிவாக மராட்டிய மாநிலத்தில் தோன்றிய ஞானதேவர் கூறிய திருவாக்கினைக் கேட்போம்.

பிரளய கால வெள்ளத்தில் கங்கையும், சமுத்திரமும் தன் உருவை இழப்பதுபோல இவர்களின் அந்தரங்க இயல்பை உணர்ந்தால் மௌனத்தில் ஆழ்ந்துவிடும். சூட்சுமத்திலிருந்து தூலமாக மாறுவதற்கு உள்ள இடைவெளியாய்த் தோன்றுவது பஸ்யந்தி, மத்தியமா, வைகரி என்பது நால்வகை வாக்குகளும் அறியாமையோடு மரித்தலும், தத்துவ ஞானமாய் மீண்டும் உயிர்த்தெழுகிறது. - ஞானேஸ்வரி

மூலதாரத்தில் உள்ள எண்ணம் பரா என்பது அது நாபிக்கு வருவது பைசந்தி என்ற வாக்கு சகல வேதமந்திரங்களும் பைசந்தியில் அடக்கம். இங்கு ஒலிக்குறிப்பிற்கே மதிப்பு.

அளவிற்கோடல் அந்தணர் மறைத்தே
அஃது இவண் நுவலாது – தொல்காப்பியர்

மூலஒலிக்காற்றை ஞானிகள் மறைக்கப்பட்டது எழுத்து - இதற்கு நான் இலக்கணம் கூறவில்லை என்பார் தொல்காப்பியர். அடுத்து இருப்பது மத்திமை என்ற வாக்கு இதயத்தில் இருப்பது. இதற்கு மேல் கண்டத்திலிருந்து சொற்களாக வெளிவருவது வைகரி என்பதாகும். மூலதாரத்திலேயே எண்ணம் அடங்கிவிடுவதே – சும்மாயிருத்தலாகும்.

உதித்த இடத்தில் ஒடுங்கியிருத்தலது
கன்மம், பக்தியும் உந்திபற
அது யோகமும், ஞானமும் உந்திபற – ரமணர்

அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலேனே என்பது, முன்பு புறத்தில் எதை, எதையோ கண்டு மகிழ்ந்தேன், அவையாவும் இப்போது இறைவனாக ஆன்ம சொரூபமாக உள்ளது என்பதாகும்.

அறிவாகி நின்ற நிலையிற் சும்மா இரு; நினைப்பற்று சும்மாயிரு என்று பலவிதமாய் சும்மாயிரு சும்மாயிரு என்று கூறினார்களே தவிர, அதன் வழியை விளக்கமாக யாரும் வெளிப்படுத்தவில்லையே? என்றால் அது எவ்வித சாதனைகளாலும், யோகத்தாலும் அடைய முடியாது என்பதாம்? ஆக என்னதான் செய்வது? சும்மாயிரு; சும்மாயிரு.

மூச்சைப் பிடித்து விழி பிதுங்க வேண்டாம்,
உடலை வருத்தி யோகம் எதுவும் வேண்டாம்.
சும்மாயிருக்க சுகஉதயம் ஆகுமே
இம்மாய யோகம் இனி ஏன்? – தாயுமானவர்

சும்மா இருக்கும் சுகத்தைப் பெறவேண்டும் என்ற அருட்தாகமும், வேகமும் இருத்தல் வேண்டும். இது எளிதில் கிட்டாது. பல காலுஞ்செய்த வழிபாட்டாலும், சாதனைகளாலும், சித்த சுத்தியாலுமே கிடைப்பதாம்.

இதனை இறைவனிடத்து, குரு மூர்த்தியிடம் யாசித்து பெறுவதே எளிய வழியாகும். அருணகிரி, பட்டினத்தார், தாயுமானவர் என பலரும் சென்ற பாதையும் அதுவே. இந்நிலையையே,

கண்மூடி மௌனியாகத் தனியே இருப்பதற்கு
எண்ணினேன்; சாமி அறியாதோ?

என்பார் தாயுமானவர்.

மௌனம் என்றால் வாக்கு மட்டுமே மௌனம் அல்ல. வாக்கு மௌனம், நாட்ட மௌனம், மனோ மௌனம் என மூவகைப்படும். உடல் அசையாமல் இருப்பது நாட்ட மௌனம். நாவு அசையாமல் சும்மா இருப்பது வாக்கு மௌனம். மனம் அசையாது நினைபின்றி சும்மா இருப்பது மனோ மௌனம். எனவே சும்மா இருத்தல் என்பது மௌனியாய் சிந்தனையை அடக்கி இருத்தலாகும். வாக்கு மரித்தாலும், வாக்கின் கடன் தீரவில்லை. அந்தக் கடன் குருவின் காலடியில் என் தலையை வைத்துத் தீர்த்தேன்.

சற்குரு நமது உள்ளத்தில் குடி புகுந்துவிட்டால் பின்பு வாய் திறந்து பேச இயலாது என்பார் சிவவாக்கியர்.

செய்யத்தெங்கிலே இளநீர் சோ;ந்த காரணங்கள் போல்
ஐயன் வந்து மெய்யகம் புகுந்து கோயில் கொண்ட பின்
வையத்தில் மாந்தரோடு வாய் திறப்பதில்லையே
– சிவவாக்கியர்

ஞானநெறிக்கு ஏற்ற குரு – தானம்
தருமம் தழைத்த குரு – என் சிந்தை கோயில் வாழும்
ரமண குரு வாழி வாழியே!

# எல்லா மைலார்ட் – 3

## வி. நிரஞ்சன்

*நாடு நகர் ஆலயங்கள் நாகம் முழை எங்குளங்கும்*
*தேடி உள் நைந்து திகைத்து அலறிமாடு இலர்கள்*
*வைத்துப் புதைத்து இருந்த மா நிதியைக் கண்டாற் போல்*
*உத்தமனே கண்டேன் உனை*

*- வள்ளலார் சாத்திரம்: ஆசிரியனைத் தேடிக் காண்டல்*

உடலையும் உலகத்தையும் உண்மை என்று நம்புகின்ற சாமானிய மக்களில் ஒருவராகத்தான் எல்லா பகவானை அடைந்தார். பகவானின் சன்னிதியை அடைந்த பிறகு தான் தனது சாதனைகளின் வெறுமையை உணர்ந்தார்; பகவானின் சும்மா இருத்தலின் பெருமையினையும் உணர்ந்தார். அத்துணைச் சாதனைகளுக்குப் பின்னும் தனது மனம் அமைதியுறாது சலித்துக் கொண்டிருப்பதையும் அறிகின்றார். எதைச் செய்தால் மனம் ஓயும் என்பது மட்டும் அவருக்குத் தெரியவில்லை. எதைச் செய்துவிட்டால் எல்லாம் செய்துவிட்ட நிறைவை அடைய முடியும் என்பதற்குச் சான்றாக பகவான் சன்னிதி பூரணத்துவம் பெற்று விளங்குவதைக் காண்கின்றார்.

உடலும் உலகமும் பொய், தன்னுள் விளங்கும் பூரண உணர்வே மெய். உடல், மனம், புத்தி கடந்து விளங்கும் அப்பூரண உணர்வே நம் சொருபம் என்று திடம் பட உணர்கையில்தான் பூரணத்துவம் கிட்டும் என்பதை பகவான் தனது சகஜ சமாதி நிலையின் நின்று சொல்லாமல் சொல்கின்றார். இதை அறிந்துகொள்கின்றார் எல்லா.

பொய்யாகிய பாம்பைப் பார்ப்பது போனால் தான், உண்மையாகிய கயிற்றைப் பார்க்க முடியும். அதுபோல் பொய்யாகிய உலகம் உண்மை விடயம் போல் காணப்படுவது போனால் தான், சொருபம் விளங்கும் என்கின்றனர் பகவான். இது எவ்வளவு உண்மை. நான் மாறிக்கொண்டிருக்கும் தோற்றங்களை நோக்கி ஓடிக்கொண்டிருந்தேன். அவற்றின் ஆதாரமாக மாற்றமில்லாத ஒன்று இருக்கின்றது என்று நினைத்ததே இல்லை, என்கின்றார் எல்லா.

மாற்றமில்லாத ஒன்று பூரண உணர்வே. அதுவே ஜீவனின் சொருபம். அனைத்து ஜீவர்களும் ஒரே பூரண உணர்வே. தோற்றத்தில் ஜீவர்கள் பல்வேறாய்ப் பேதப்பட்டாலும் உண்மையில் உயிர்கள் அனைத்தும் ஒரு பூரணப் பொருளே என்கையில் உயிர்களின் சொருபத்தின் மேல் கொள்ளும் அன்பு அனைத்து ஜீவர்களின் உண்மையின் மேல் கொள்ளும் அன்பாகிவிடுகின்றது. தன்னை நேசிப்பது சகலத்தையும் நேசிப்பதாகிவிடுகிறது. அனைத்து வேறுபாடுகளையும் கடந்த ஒருமையே ஜீவத்துவத்தின் மெய்ம்மை என்று பகவான் காட்டுவது அவரது மனதில் ஆழமாய்ப் படிகின்றது.

தோன்றி மறையக்கூடிய சகலத்தின் அதிட்டானம் தோன்றி மறையாத பூரணமே என்னும் பேருண்மையினை உலகத்தவர்க்கு சதா உணர்த்திக் கொண்டிருக்கின்றது பகவானது மோன சன்னிதி. அதை விட ஒரு பேருபகாரம் யாரும் உலகத்தவருக்குச் செய்யமுடியாது என்று எல்லா பரவசப்பட்டு பகவானின் புகழ் பாடுகின்றார்: பருப் பொருளாய் புலப்படுகின்ற உலகத்திற்கும் இந்தப் படைப்பையே தன்னகத்தே கொண்டு வெளிவாராது விளங்கிக் கொண்டிருக்கும் மூலப் பொருளுக்கும் இணைப்பாக விளங்குவது அன்றோ பெரும் சாதனை? எந்த ஒரு

*மெய்ஞ்ஞானம் இல்லாது போனால் இந்த உலகம் பரிதாபத்திற்குரிய கேலிப் பொருளகிவிடுமோ அந்த மெய் ஞானத்தின் வாழ்ந்து வரும் உருவகமாக விளங்கிக் கொண்டிருப்பதன்றோ மாபெரும் சாதனை? மேல் எழுந்த வாரியாக எவ்வளவு தடைகள் தோன்றினும், ஒவ்வொரு ஜீவனின் இதய மையத்தில் நித்திய சாந்தத்தை விதைத்துவிடுவது அல்லால் வேறு எதுதான் சாதனை ஆகிவிடும்? வாழ்வின் அதி உன்னத சாதனை இது இல்லையா என நான் கேட்கிறேன்?*

*ஒரு புதிய உலகத்தை நிருமாணிக்க வேண்டும் என்றால் நாம் செய்வதற்கு ஒன்றும் இல்லை. இறைவா நின் சித்தப் படியே நிகழட்டும் என்று பரிபூரணமாய்ச் சரணடையவேண்டும். அகந்தை மனம் வேறு; ஆன்மாவின் உணர்வு வேறு என்று நாம் தெளிவாகப் பிரித்துக் காணவேண்டும், என்று எல்லா குறிப்பிடுகின்றார். அவருடைய சிந்தனை பகவானது உபதேசங்களை அடிப்படையாகக் கொண்டு மேலும் மேலும் சூக்குமமாகின்றது. நான் செய்வதற்கு என்று என்ன இருக்கின்றது? ஆன்மத்தேடலைக்கூட நான் ஆகச் செய்துவிடமுடியாது. நான் செய்ய வேண்டியதெல்லாம் சம்பூரண சரணாகதியில் அகந்தை அழிந்து நிற்றலே. பூரணத்திற்குக் குறை எங்கே, அதற்கு என்று விருப்பம் தான் எங்கே? என்னுள் பூரணத்திலிருந்து பிரிவு படாத உணர்வு மையம் உள்ளதே, அதுவே திரும்ப வேண்டப்படுவது. நான் விரும்புகின்ற எனது சொருபமாகிய பூரணத்திலிருந்து பிரிந்துபட்டேன் என்னும் பேதைமையை ஒழித்துவிடுவதற்குக் காலம் பிடிக்கும். நான் அதில் தான் நிலைக்கப் போகின்றேன். ஆசைகளை ஒழித்துவிட்டேன். எதுவும் என்னைத் திசை மாற்றாது, என்கின்றார் எல்லா.*

*நான் யார் விசாரமே மூலக் கேள்வி. பிற கேள்விகள் அனைத்தும் அதிலே சென்று அடங்கிவிடும் என்று*


எல்லா மைலார்ட்

பகவான் சொல்கின்றார். ஒரு முறை எல்லா மலை அடிவாரத்தில் பகவானை எதிர் நோக்கிக் காத்திருக்கின்றார். வழக்கம் போல் பகவான் மலை மீது சற்றே உலாவ வரும் பொழுது அவரிடம் மூலக் கேள்வி நான் யார் என்பதற்கு விளக்கம் கேட்கின்றார். பகவான் கொடுத்த விளக்கம்: நீ யார் என்பது தெரியாது போனால் பிற கேள்விகள் எங்கிருந்து வருகின்றன என்பதைத் தெரியாய். பச்சைக் கண்ணாடியை அணிந்தால் எல்லாம் பச்சையாய்க் காண்பாய். ரோஜா நிறக் கண்ணாடியை அணிந்தால் எல்லாம் ரோஜா நிறமாய்க் காண்பாய். நீ எதைப் பார்க்கிறாயோ அதை உன்னுடைய நம்பிக்கை அவ்வண்ணமே உருமாற்றிக் காண்பிக்கும். ஆதலால் எல்லாவற்றிற்கும் மேலாக, நீ யார் என்று தெரிந்து கொள்ளவேண்டும்.

இது எல்லாவின் மனதில் நன்கு பதிந்தது. ஆனால் இது எல்லாவின் மனதில் வேறு ஒரு சிக்கலான கேள்வியை எழுப்பிவிட்டது. இன்னொரு நாள் மலை அடிவாரத்தில் அதே இடத்தில் பகவானிடம் தனது ஐயத்தை எழுப்புகின்றார். நான் என்னை உள்ளவாறு அறிந்துகொள்ளாத வரை எவ்வாறு அகந்தையின் குரலையும் ஆன்மாவின் குரலையும் வேறுபடுத்தி அறிந்துகொள்வேன்? என்பதே அவரது ஐயம். அவர் (பகவான்) அவ்வளவு அருகில் இருந்த சமயம் அவரது கண்கள் ஒரு கருப்புக் கோளங்களாய் இல்லை. அவை பொன் நிறக் கிரணங்களோடு கூடி இருந்தன;

விளிம்புகள் வெண்பனித்துளிகளால் ஆக்கப்பட்ட நுண் வளையங்களாய் ஒளிர்ந்தன, என்கின்றார் எல்லா.

எல்லா: அகந்தை யார்?

பகவான்: தன்னைத் தவிர வேறு இல்லை எல்லா: தற்சமயம் நான் என்ன செய்வதென்று எப்படித் தெரிந்து கொள்வது? கண்மூடித்தனமாக இங்கும் அங்கும் ஓடிக்கொண்டிருக்கின்றேன். உள்ளிருந்து ஓர் உந்துதல் இருந்தால் மட்டுமே எதையாவது செய்வது என்று விரும்புகின்றேன். அது வரை இங்கே பல ஆண்டுகளாக இருக்கவேண்டுமா?

பகவான்: இங்கே அங்கே என்றால் என்ன? இங்கே இருந்தலும் சரி சுவிட்செர்லாந்தில் இருந்தாலும் சரி இரண்டும் ஒன்றே?

எல்லா: ஆதலால் நான் வாழ்வது மட்டுமேபோதும். ஏதொன்றையும் கேட்கக்கூடாது அல்லவா?

பகவான்: சும்மா இரு. அதுவே நீ செய்ய வேண்டிய வேலை. ஆனந்தத்தில் இரு.

இன்னொரு முறை சொருப ஞானம் கணத்தில் நிகழ்கின்றதா இல்லை படிப்படியாய் நிறைவுறுகின்றதா என்னும் தனது சந்தேகத்தை பகவானிடம் கேட்கின்றார். படிப்படியாய் வருகின்றது என்று கூறிய பகவான் சொருப ஞான அடைவின் பின்னர் சொருப ஞானம் இல்லாது இருந்த காலம் என்று ஒன்று எப்போதும் இருந்ததில்லை என்று உணரவைக்கும் என்கின்றனர். உலா முடித்துத் திரும்புகின்ற வேளையில் கூடுதலாக விளக்கம் அளிக்கும் பகவான், திடீரென்றும் அது நிகழலாம் அது சூரியோதயத்தைப் போன்றது. அதற்குப் பல மணி நேரத்திற்கு முன்னாலேயே வானம் வெளுத்துக் காணப்படும், ஆனால் சூரியன் தோன்றுகின்ற பொழுதுதான் பகல் ஆகிவிட்டது என்று நாம் பொதுவாகச் சொல்லுகின்றோம், என்று விளக்குகின்றனர்.

எல்லா பகவானிடம் பல கேள்விகளை எழுப்பி அவற்றிற்கு பகவானின் விளக்கங்களையும் பெற்றிருக் கின்றார். சில கேள்விகள் புதுமை யானவையாகவும், சில அவருடைய சூழ்நிலை அனுபவத்தினின்றும் பிறந்திருக்கின்றன. மேலை நாட்டினின்று வந்து பகவானின் சன்னிதியிலேயே தங்கிவிட்ட உத்தம சீடர்களின் மூலமாகவும் அரிய செய்திகளை எல்லா பெறுகின்றார். இதற்கு ஓர் எடுத்துக்காட்டு எஸ்.எஸ்.கோகன் எல்லாவிடம் பகிர்ந்துகொண்ட ஓர் அரிய செய்தி. அதுவும் சொருபஞான அடைவு குறித்ததாய் இருப்பது குறிப்பிடத்தக்கது.

கோகன் பேராவலுடனும் பெருத்த எதிர்பார்ப்புடனும் தான் பகவானை நாடி வந்திருக்கின்றார். பகவானைக் கண்ட கணமேயே ஓர் அற்புதமாய் ஞானோதயம் நிகழ்ந்து தான் பெரு மாற்றம் அடைந்துவிடப்போவதாகக் கற்பனை செய்துகொண்டிருக்கின்றார். ஆனால் அவ்வாறு அற்புதம் ஒன்றும் நிகழவில்லை. ஆதலால் மனம் கலங்கித் தனிமையில் கண்ணீர் விட்டு அழுதிருக்கின்றார். எல்லாவற்றையும் விட்டுவிட்டு பகவானையே கதி எனக் கருதி வந்தவர் ஆன்ம ஞானம் என்பது பகவானது சன்னிதியில் உடனேயே ஏற்பட்டுவிடுகின்ற அற்புதம் எனக் கற்பித்துக்கொண்டார். அதன் பிறகு தான் அவருக்கு விளங்குகின்றது ஆன்ம ஞானம் என்பது அடையவேண்டிய பொருள் இல்லை அது நமது இயல்பு நிலை என்று. உள்ள பொருள் உள்ளத்தே உள்ளல் அற உள்ளது என்று பகவான் கூறியிருக்கின்றனர். விருத்திகள் அடங்கிய, எண்ணம் எழாத, நிலை நமது இயல்பு நிலை. அதுவே சொருப ஞானம். அதுவே தன்னை அறிதல். தன்னை அறிவதற்கு ஏதொன்றும் செய்யவேண்டுவதில்ல. எப்போதும் நாம் தானாய் இருந்து கொண்டிருக்கின்றோம். ஆதலால் தன்னை அறிவதற்குத் தானாய் இருத்தல் ஒன்றே போதும். பகவான் எல்லாவிடம் கூறியதுபோல் நாம்

செய்யவேண்டுவதெல்லாம் ஒன்றுமே செய்யாமல் இருப்பது தான், சும்மா இருப்பது தான், ஆனந்தத்தில் இருப்பது தான். இந்தத் தெளிவு பிறந்தபின் கோகன் மனச் சாந்தி அடைந்தார். பகவானையே புகலாகக் கொண்டார். பகவானது சன்னிதியில் அவரது விசார சாதனை மெல்ல மெல்ல மேம்படத் தொடங்கியது. குரு ரமணா என்னும் அவரது சிறிய நூல் ஓர் அரு நிதியம். பக்தியால் பிணைக்கப்பட்டவருக்கு ஞானத்தையும் ஞானமிகுந்து தேடுபவருக்கு பக்தியையும் குறையின்றி உபதேசிக்கும் பகவானைப் போன்றே உபதேசிக்கும் ஸ்ரீமத் பாகவதத்தை சுருக்கமாக ஆங்கிலத்தில் ஆக்கியுள்ளார் ஈரானைச் சார்ந்தவரும் யூத மதத்தினரும் ஆகிய கோகன் அவர்கள்.

அனைத்து ஜீவர்களும் ஓர் உண்மையே. அனைத்து ஜீவர்களுக்கும் ஒன்றே உண்மை. பேதங்கள் அனைத்தும் மனதால் கற்பிக்கப்பட்டவை. அவை பொய்யே. அபேதமே உண்மை. இருந்தொளிர் உனை அறிவுறுத்திடற்கென்றே இருந்தனை மதந்தொறும் வித வித உருவாய் என்னும் பகவானது பாடல் வரிகள் கேட்கின்றன அன்றோ?

எல்லாவின் குறிப்புக்கள் அவரது சிந்தனையின் ஓட்டமாகின்றன. அந்த ஓட்டம் பகவானையும் அவரது சன்னதியையும் அவரது உபதேசங்களையும் மையமாகக் கொண்டு ஒரு தத்துவ விசாரமாக வெளிப்படுகின்றது. குரு பக்தியும் ஞான விசாரமும் ஒன்றோடு ஒன்று இணைந்து உணர்ச்சிப் பெருக்காகி எத்துணையோ பகவானது அடியவர்கள் சிறந்த பாடல்களைப் பாடியிருக்கின்றனர். அவ் வடியவர்களுள் மூத்தவர்கள் சிவப்பிரகாசம் பிள்ளை அவர்களும் முருகனாரும். எல்லோருமே பற்பல விதங்களில் பொங்கி வழியும் உணர்ச்சிப் பெருக்கால் தத்துவ விசாரத்தையும் குரு பக்தியையும் குருவருளையும் சொருப

*ஞானத்தையும் முக்தியையும் உள்ளடக்கி எவ்வளவோ பாடல்கள் பாடியுள்ளனர். எல்லாவும் அவர்களில் ஒருவராகிவிட்டார். அவரது கற்பனை பாடல்களாக வெளிவராமல் உரைநடையில் வெளிப்படுகின்றது. சிரத்தை, ஆர்வத்தின் தீவிரம் இவற்றின் வெளிப்பாடாய் அவை அமைந்திருக்கின்றன.*

*ஒரு வெளிப்பாடு பின்வருமாறு முடிகின்றது:*

*பகவானே, நான் உறவுகளை இழந்து தனித்துவிடப்பட்ட குழந்தை ஆகிவிட்டேன். என்னுடைய இதய சாந்திக்குரிய தந்தையைக் கண்டுகொண்டேன்.*

*வேறு எதுவும் என்னை வசப்படுத்தி உங்களிடமிருந்து பிரித்துவிடாது காத்து அருளுங்கள். என்னோடேயே எப்பொழுதும் இருங்கள். நீங்கள் தான் எனக்கு உதவி.*

*நீர் மல்கும் எனது கண்களை நீங்கள் பார்க்கும் பொழுது சற்றே வெளிப்படுகின்ற உங்களது புன்னகையும் அழகிய வதனமும் என்னே!*

*இறைவன் உலகத்தில் உள்ள சகலத்தினும் அதி அற்புதமானவர் எனின் அவர்தான் உண்மையில் தேடுதற்குரியவர்.*

*நான் இறைவனை எதிர்கொள்ளவேண்டும். அவரைக் காணவேண்டும். ஆனால் அவரோ இன்னமும் நான் தெரிந்துகொள்ள இயலாதபடி ஒரு திரைக்குப் பின் மறைந்திருக்கின்றார்.*

*சகலத்திலும் அவர் இருக்கின்றார் என்று எனக்குத் தெரியும். இது புத்தியை வைத்துக்கொண்டு ஊகிப்பதால் கிட்டும் அறிவு. இதற்கு மேலும் நான் வேண்டுகின்றேன்.*

*நான் இறைவனை மெய்ப்பட அறியவேண்டும். அடையாளங் கண்டுகொள்ள வேண்டும். எனது*

ஐம்பொறிகளின் மூலமாக இயலாது எனில், இனி என்னில் புதிய பொறி ஒன்று பிறக்குமாக. ஐயனே, இறைவனை எதிர்கொள்ள அருள் பாலியுங்கள்.

பிறந்த நாட்டினாலும் பேசுகின்ற மொழிகளாலும் வேறுபட்டிருப்பினும் எல்லாவின் இவ் வேண்டுதல் தமிழின் பக்திப் பாடல்களோடு ஒன்றிக் கலந்துவிடுகின்றது இல்லையா? இதுவும் குரு அருள் அன்றோ?

பகவானது சன்னிதியில் எல்லா பெற்ற படிப்பினைகளைச் சற்றே நோக்குவோம்.

மனம் என்பது என்ன, எண்ணம் யாருக்கு, எனக்கு எனில் நான் யார் என்று விசாரித்தவாறு கடைசி வரை சென்று எண்ணம் எழுகின்ற முலத்தானத்தை அடை. அப்பொழுது தான் எண்ணம் என்பது காலதேச காரண காரியத்தால் கட்டப்பட்ட பொய்யாகிய உலகத்தினனவை என்று தெரியும். எண்ணங்கள் ஒரு பொருட்டன்று என்றும் உறுதியாகும். நான் யார் என்னும் எண்ணத்தைப் பிடித்துக்கொண்டு விசாரம் பண்ண முடியவில்லை எனில் மந்திரத்தைப் பிடித்துக்கொள், என்று பகவான் சொல்கின்றனர்.

இது குறித்து பகவானிடம் ஒருவர் கேட்டார்: மந்திரத்தைச் சொல்லிகொண்டே இருப்பது வெறும் சத்தம் மட்டும் தானே கிளம்புவது போல் ஆகிவிடும் அல்லவா?

பகவான்: பயிற்சி, திரும்பத்திரும்பப் பயிற்சி. எல்லாச் சாதனைகளும் மனதை ஒருமுனைப் படுத்துவதற்காகவே. உன்னுடைய உயர் மனதைப் பேச்சற்ற மோனமாய்ச் சுருக்கி அதில் கலந்துவிட வேண்டும். சாதகர்களில் சிலர் முன்னேறியவர்களாய் இருப்பர். அவர்கள் வித்தியாசமாகச் சொன்னால் புரிந்துகொள்வார்கள். ஒருவன் வந்து, கடவுள் எங்கே

*உள்ளார்? என்கின்றான். அவனது ஆன்மா பக்குவத்தில் பழுத்தது என்று நான் கண்டால், நீதான் கடவுள், என்கிறேன். அது போதும் அவன் ஞானம் அடைய.*

*எல்லா: அப்படியானால் நாங்கள் எவ்வளவு பக்குவம் அடைந்திருக்கிறோம் என்பதை பகவான் காண்கின்றனர் இல்லையா?*

*பகவான்: எனது பார்வையில் எல்லோரும் பக்குவ ஆன்மாக்களே. நீங்கள் எல்லோரும் ஆனந்தத்தில் உள்ளீர்கள். நாம் எல்லோரும் ஆனந்தத்தில் உள்ளோம். நீ திருவண்ணாமலையில் இந்த ஆசிரமத்தில் இருப்பதாக நினைக்கிறாய். நீ இந்த உடல் என்று நினைக்கிறாய். ஆனால் இது தான் மாயை. நீ எப்போதும் எல்லாத் தளைகளில் இருந்தும் விடுபட்டே இருக்கின்றாய். (மெய்ஞ் ஞானம் நிரம்பிய பகவானது கண்கள் இந்த வார்த்தைகளை உச்சரிக்கும் பொழுது அந்த உண்மையை நான் வாழ்வது போன்று தோன்றுகின்றது என்று எல்லா உணர்ச்சிபூர்வமாகக் கூறுகின்றார்).*

*இன்னொரு நாள் எல்லா பகவானிடம் யாரும் கேட்டிராத கேள்வியைக் கேட்கின்றார்: நீங்கள் ஆன்ம ஞானம் அடைந்து விட்டீர்கள். இப்பொழுது உலகத்தையும் எங்களையும் எவ்வாறு காண்கின்றீர்கள்?*

*பகவானது பதில்: ஞானம் அடைந்திராத அனைத்து உயிர்களும் திரையில் நகர்ந்துகொண்டிருக்கும் நிழல்கள் போல் இருக்கின்றன. ஒரே ஒரு உண்மை அந்தத் திரை மட்டும் தான். இருள் அதிகமாக அதிகமாக, நகர்ந்து கொண்டிருக்கும் நிழல்கள் மேலும் மேலும் உண்மைபோல் தோன்றுகின்றன. எனக்கு இருள் இல்லை.*

*இதோடு தொடர்புடைய கேள்வி ஒன்றை முனகல வெங்கடராமையா கேட்கின்றார்: நான் என்னும்*

எண்ணத்தின் இயல்பு இருளா ஒளியா, அதாவது, அது அகந்தையா ஆன்மாவா?

பகவான்: திரையால் மறைபட்ட உணர்வாய் இருக்கின்றதாயினும் நான் என்னும் எண்ணத்தின் இயல்பு ஒளியே, பிரதிபலன ஒளியே. பிரதிபலனம் ஆவதற்கு அது ஒரு பிரதிபலிக்கும் தளத்தைச் சாரவேண்டும். பிரதிபலனத்தால் உண்டாகிய அந்த பிரதிபலன ஒளி தான் தோன்றிய இடத்தை மறந்து தன்னை சுய இருப்புக் கொண்டதாக எண்ணி தான் ஒளிரச் செய்கின்ற உண்டாக்குகின்ற புலப் பொருள்களும் தன்னைப்போல் சுய இருப்பும் இயக்கமும் கொண்டவை என்று நினைக்கின்றது. ஆதலால் தன்மையும் முன்னிலை படர்க்கைப் பொருள்களும் கூடிய உலகம் படைக்கப்படுகின்றது.

எல்லா: ஆனால் பிரதிபலிக்கின்ற தளம் எங்கிருந்து வருகின்றது?

பகவான்: இந்தக் கேள்வியைக் கேட்பதற்கு அங்கே யார் உண்டு?

எல்லா: புரிந்து கொள்கிறேன். ஆனால் தளம் என்கின்ற வார்த்தையால் ஞானி ஒருவர் எதைக் குறிப்பிடுகின்றார்?

பகவான்: நான் என்னும் எண்ணம் உதிக்கும் இடத்தை அடையும்பொழுது அந்தத் தளத்திற்கு வருகிறோம். அதன் பிறகே அதற்கு உண்மை இருப்பு இல்லை என்று காண்கிறோம். (அந்த இடத்தில்) எல்லாம் ஒளியே. பிரதிபலன ஒளி தோன்றுவதற்கான இருள் சற்றும் இல்லாது போய் விடுகிறது.

எல்லா: அப்பொழுது அந்தத் தளம் ஒரு சாக்ஷியைப் போல் இருக்கின்றது. அதை அடைந்தவுடன் மறைந்துவிடுகின்றது. இல்லையா?

பகவான்: ஆம். கண்ணாடியில் இடைவிடாமல் உன்னையே பார். உன்னுடைய பிரதி பிம்பத்தைப் பார்த்த வண்ணம் அதை நெருங்கியவாறு அதோடு ஐக்கியபடுத்திக் கொண்டுவிட்டால் கண்ணாடியே இல்லாது போகும். இப்பொழுது எங்கே ஒளி மட்டுமே உள்ளதோ அங்கே பார்த்தல் என்பதே இல்லை. எல்லாமே சத் (இருப்பே) ஆகும்.

பகவானுடைய கனிவான இந்த விளக்கத்தால் பரவசரான முனகல வெங்கடராமையாவின் கண்கள் அகல விரிந்து வெளிவந்தன. உண்முகமாவதற்கு பகவானுடைய சன்னிதியும் அவரது விளக்கங்களும் இவ்வகை உரையாடல்களின் மூலமாக அளவுகடந்த பேருபகாரமாகின்றன என்கின்றார் எல்லா.

கேட்கப்படாத பக்தர்களின் கேள்விகளுக்கும் பதில்கள் எவ்வாறோ பகவானின் மோனத்திலிருந்து கிடைத்துவிடுகின்றன என்பது பக்தர்களின் அனுபவம். இதை எல்லா நன்கு அறிவார். ஆதலால் அவரும் பகவானின் சன்னிதியில் அவருடன் வாய்விட்டுப் பேசாது மனதில் உரையாடலை மேற்கொண்டார். அவரே வியப்படையும் அளவிற்கு பயனும் அடைகின்றார். ஒரு தெளிவு பிறப்பதையும், இதுவரை தனக்குத் தோன்றாத கருத்துக்கள் வெளிப்படுவதையும் உணர்கின்றார். பகவானுடைய சன்னிதியில் அவரது மனம் பக்குவம் அடைவதற்கு இந்த முயற்சி ஏதுவாகின்றது.

குறிப்பு: எல்லா மைலார்ட் பற்றிய விரிவான நீண்ட தொடர் கட்டுரை ரமணாசிரமச் செய்தி மடல் சரணாகதியில் ஜனவரி 2018 துவங்கி அக்டோபர் 2018 வரை வெளியிடப்பட்டிருக்கின்றது. மேற்கோள்களுக்கான மூலம் அக் கட்டுரையே.

# மேதா ஸூக்தம்

# அறிவாற்றலுக்கு ஒரு பிரார்த்தனை

**வி ஆர் கணேசன்**

*மகாநாராயண உபநிஷதத்தில் ஒரு பகுதி 'மேதா ஸூக்தம்' எனப்படும்.*

*இந்த மேதாஸூக்தம், தைத்திரிய உபநிஷத்தில் புத்திசக்தியை பெறுவதற்குரிய ஒரு பிரார்த்தனையாக விளங்குகிறது.*

*"ஆழ்ந்த ஆன்மிக உண்மைகளைக் கூறும் நூல்களிலுள்ள சொற்களையும் அந்தச் சொற்கள் தெரிவிக்கும் கருத்துக்களையும் மறவாமல் நினைவில் வைத்துக் கொள்ளும் ஆற்றலுக்கு மேதாசக்தி என்று பெயர்" என்று சாயனாச்சாரியார் விளக்கம் தருகிறார்.*

*இங்கு சொல்லப்படும் 'மேதா' என்ற புத்திசக்தி விசேஷமான, அபூர்வமான, அசாதாரணமான, அரிய, நுட்பமான ஆன்மிக விஷயங்களைக் கிரகிக்கவல்ல புத்தி சக்தியாகும்.*

*இந்த புத்தி சக்தியை 'சூட்சும திருஷ்டி' அல்லது 'சூட்சும ஞானம்' என்று சொல்லலாம்.*

*அதி உயர்ந்த ஆன்மிகக் கருத்துக்களைப் பலர் பெரியோர்களிடமிருந்து கேட்கிறார்கள்; அல்லது*

---

*நன்றி மணிமேகலைப் பிரசுரம்*

படிக்கிறார்கள். ஆனால் அந்த ஆன்மிக கருத்துக்கள் அவர்கள் உள்ளத்தில் ஆழமாகப் பதிவதே இல்லை; அந்தக் கருத்துக்களைப் பின்பற்றுவதற்குரிய மன அடக்கமும் அவர்களிடம் இருப்பதில்லை. இதற்குக் காரணம் ஆன்மிக வாழ்க்கைக்குத் தேவைப்படும் மேதா சக்தி அவர்களிடம் இல்லாமல் இருப்பதுதான்.

மேதா சக்தி என்பது எல்லா சாஸ்திரங்களின் சாரத்தையும் கிரகிக்கவல்ல சக்தியாகும்; அழியாத அமரத்துவ நிலையைப்பெறச் செய்யும் உயர்ந்த அறிவாற்றல் ஆகும்.

'மேதா' எனப்படும் இந்த புத்தி சக்தியை, நல்லொழுக்கங்களைக் கொண்ட தூய வாழ்க்கை வாழ்வதாலும், தவத்தினாலும், பிரம்மச்சரியத்தினாலும் ஒருவர் பெற முயற்சிக்க வேண்டும்.

இந்த மேதா சக்தியைப் பெற்றவர்களால் மட்டுமே விஷய போகங்களில் செல்லும் மனதையும் புலன்களையும் கட்டுப்படுத்தி தூய்மை பெற்று, ஜீவ-பிரம்ம ஐக்கிய ஞானம் அடைய முடியும்.

அத்தகைய உயர்ந்த சாதகர்களின் குழந்தைகளும் சீடர்களும்கூட, நல்ல நடத்தையும் புத்தி சக்தியும் பெற்றவர்களாகவும், ஞானம் பெறத் தகுதியுள்ளவர்களாகவும் ஆகிறார்கள்.

நமது இந்து மதத்தில் சந்நியாசிகள் சொல்லவேண்டிய மந்திரங்கள் என்று குறிப்பாகச் சில மந்திரங்கள் உண்டு. அவற்றுள் மேதா ஸூக்த மந்திரங்களும் அடங்கும். இதனால் ஆன்மிக வாழ்க்கையில் கிரமமாக ஆழ்ந்து செல்ல விரும்புகிறவர்களுக்கு இந்த மந்திரங்கள் பெரிதும் பயன்படுகின்றன என்பதை அறியலாம்.

'மேதா' என்பது அறிவாற்றல்தான். ஆனால் இது பொதுவாக நாம் அறிவாற்றல் என்று கருதுவதிலிருந்து வேறுபட்ட மிகவும் உயர்ந்த வகையைச் சேர்ந்த

அறிவாற்றலாகும். இதை தெய்விக அறிவாற்றல் அல்லது சூட்சுமமான நுண்ணறிவு என்று சொல்லலாம்.

உலகில் பேரும் புகழும் பெற்றிருந்த அறிவியல் வாதிகள், கவிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கிய மேதைகள், தத்துவ மேதைகள், ஓவியர்கள், பொதுவாகத் திறமை படைத்தவர்கள் சாதித்த சாதனைகள் அனைத்தையும் சாதிப்பதற்கு சக்தியின் ஒரு பகுதியே போதுமானது.

மேதா சக்தியைப் பயன்படுத்தி எழுதப்பட்டவையே அருளாளர்களால் உலகிற்கு வழங்கப்பட்ட அருள் நூல்களும் அறநூல்களும் ஆகும்.

ஆன்மிக வாழ்க்கையில் ஆழ்ந்து சென்று இந்தப் பிறவியிலேயே இறை ஞானம் பெற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் தங்களிடம் புதைந்திருக்கும் மேதா சக்தியை விழித்தெழும்படி செய்யவேண்டும்; செய்து மேதாசக்தியின் முழு ஆற்றலையும் தவ வாழ்க்கையில் முதலீடு செய்ய வேண்டும். அப்படிச் செய்பவர்களுக்கு உத்தமமான அரிய ஆன்மிக உண்மைகள் அனுபவமாகவே ஆகும்.

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உபதேசத்தின் கருத்தையும் இங்கு நாம் நினைவில் கொள்வது நல்லது.

“ஒருவன் பன்னிரண்டு வருடங்கள் பிரம்மச்சரியம் கடைப்பிடித்தால் அவனிடம் ‘மேதா நாடி’ தோன்றுகிறது. அதாவது எதையும் அறிந்து கொள்ளும் சக்தி மலர்கிறது. அதன் காரணமாக மிகவும் சூட்சுமமான விஷயங்களையும் சுலபமாக அறிந்து கொள்வான். அத்தகைய அறிவாற்றலால் ஒருவன் ஈஸ்வர தரிசனத்தையும் அடையமுடியும். இப்படிப்பட்ட பரிசுத்தம் வாய்ந்த தெளிந்த அறிவுள்ளவர்களாலேயே கடவுளை அடைய முடியும்.”

*சுவாமி விவேகானந்தரும் பின்வருமாறு கூறியுள்ளார்:*

*“மனிதனிலிருந்து மனிதனை வேறுபடுத்திக் காட்டுவது ஓஜஸ் சக்தி ஆகும். ஓஜஸ் அதிகமுள்ளவன் தலைவனாகிறான். சிறந்த வசீகர சக்தி அளிப்பது அதுவே. சிற்றின்ப சக்தி (பிரம்மச்சரியம்) சிதறிப் போகாமல் காக்கப்பட்டால் அந்த சக்தியிலிருந்து ஓஜஸ் உற்பத்தியாகிறது.*

*“இந்த ஓஜஸ் ஆற்றல் காரணமாக ஒரு புது உலகமே ஆன்மிக சாதகரின் முன்தோன்றுகிறது இதனால் எல்லா தளைகளிலிருந்தும் அவன் விடுபடுகிறான்.*

*“ஒரு மனிதன் மிகவும் அருமையான நடையில் சிறந்த கருத்துகளைப் பற்றி பேசுபவனாக இருக்கலாம். ஆனால் அது மக்களைக் கவருவதாக இருக்காது. மற்றொருவன் பேச்சில் அழகிய மொழி, கருத்து என்னும் இவற்றுள் எதுவும் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவனுடைய சொற்கள் கேட்பவர்களின் உள்ளங்களைக் கவர்கின்றன அவனுடைய ஒவ்வொரு செயலும் சக்தி வாய்ந்ததாக இருக்கிறது. இந்த சக்தி ஓஜஸ்ஸினால் வருவதாகும்.*

*கற்பொழுக்கம் உடைய ஆண்களும் பெண்களும் மட்டுமே ஓஜஸை மேலே எழுப்பி மூளையில் சேமித்து வைக்க முடியும். ஆகையால்தான் பிரம்மச்சரியம் எப்போதும் மிகவும் உயர்ந்த ஒழுக்கமாகக் கருதப்பட்டு வருகிறது. ஒருவன் பிரம்மச்சரியத்திலிருந்து வழுவியதாக உணர்ந்தால் ஆன்மிக சக்தி அவனிடமிருந்து போய்விடுகிறது. அத்தகையவன் தன் மன உறுதியை இழந்து விடுகிறான். இதனால்தான், மகத்தான ஆன்மிக வலிமையைப் பெற்ற பெரியோர்களை உருவாக்கித் தந்த உலகிலுள்ள எல்லா மதச் சம்பிரதாயங்களும் பரிபூரணப் பிரம்மச்சரியத்தை எப்போதும் வலியுறுத்தி வந்திருக்கின்றன.”*



இன்றும் இந்திய மரபு வழி வருகின்ற சிலர், சிறுவர்களுக்கு ஐந்து அல்லது எட்டு அல்லது பன்னிரெண்டு வயதில் காயத்ரி மந்திரத்தை முறைப்படி உபதேசம் செய்து வைக்கிறார்கள். உபதேசம் நிகழ்ந்ததற்குப் பிறகு நான்காவது நாள் இந்த மேதாஸூக்தம் உபதேசிக்கப்பட்டு வருகிறது. இதனையும், காயத்ரி மந்திரத்தையும் நன்கு உருவேற்றிய பிறகே வேதமந்திரங்களைப் பயிற்றுவிப்பார்கள்.

நம் இந்து மதத்தில் காயத்ரி மந்திரம் மிகவும் முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது. நிர்க்குண நிராகார அனுபவம் தருவது காயத்ரி மந்திரம். ஜீவ - பிரம்ம ஐக்கியத்தை இலட்சியமாகக் கொண்டு சாதகர்கள் இந்த மந்திரத்தை பயன்படுத்தவேண்டும். சம்பிரதாயத்தில் காயத்ரி மந்திரத்துக்கு 'தத் த்வமசி' விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த காயத்ரி மந்திரம் சில வரிகளைக் கொண்டது. இந்த மந்திரத்தின் கருத்து என்ன என்று பார்த்தால் அப்படி ஒன்றும் அதில் அர்த்தம் பிரமாதமாக இல்லை. அதாவது, அதில் அர்த்தம் இருக்கிறது என்றாலும், நாம் இப்போது தலையில் வைத்துக் கொண்டாடி வரும் அளவுக்கு அந்த மந்திரத்தில் அர்த்தம் இல்லை. சாதாரணமாகத்தான் இருக்கிறது ஆனால் இந்த காயத்ரி மந்திரத்தில் ஓர் அபாரமான, அமானுஷ்யமான தெய்விக ஆற்றல் புதைந்திருக்கிறது என்பது பரம சத்தியம். அது காயத்ரி மந்திரத்தை உருவேற்றி ஜபம் செய்பவர்களுக்கு மகத்தான ஆத்மபலத்தை தரும் ஆற்றலை தன்னுள் கொண்டிருக்கிறது.

இந்த மேதா ஸூக்தம் மந்திரங்களைப் பற்றி நினைக்கும்போது எனக்கு காயத்ரி மந்திரம் தான் நினைவுக்கு வருகிறது.

காயத்ரி மந்திரத்தில்-புறத்தளவில் அர்த்தம் என்று பெரிதாக இல்லாவிட்டாலும் மகத்தான ஆன்மசக்தி

*அதில் புதைந்திருக்கிறது. அதுபோலவே, மேதா ஸூக்தம் மந்திரங்களும் புறத்தளவில் சில அர்த்தங்கள் இருந்தபோதிலும் அது சூட்சுமமான - மகத்தான - தெய்விக ஆற்றலைத் தன்னுள் அடக்கி வைத்திருக்கிறது. ஆதலால் இந்த மந்திரங்களைத் திரும்பத் திரும்ப சொல்வதனால் மகத்தான ஆன்மிக விழிப்பு ஒருவரிடம் ஏற்படும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.*

*'ஆன்மிக விழிப்பு' பெற்றவர்கள் என்று நாம் சிலரை பற்றி சொல்கிறோமே அவர்கள் அந்த ஆன்மிக விழிப்பை பெற்றதற்கு மேதாசக்தியே காரணம்.*

*இந்த மேதா ஸூக்த மந்திரங்களை ஒரு சாதகர் சொல்லும்போது இந்த மந்திரத்துக்கு உரிய தேவதையை ஜோதிவடிவமாகத் தியானிக்கலாம். அல்லது தேவியாகவோ தனது இஷ்ட தெய்வமாகவோ, மகாசரஸ்வதியாகவோ, தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியாராகவோ நினைக்கலாம்.*

*(தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியாரை 'மகா சரஸ்வதியின் அவதாரம்' என்று பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் குறிப்பிட்டு இருக்கிறார். அது உண்மையேயாகும். மேலும் அவர், "ஞானத்தை உலகிற்கு வழங்குவதற்காகவே அன்னை ஸ்ரீ சாரதா தேவியார் அவதரித்திருக்கிறார்" என்றும் தெரிவித்திருக்கிறார்.*

*ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த பக்தர்களில் அன்னை ஸ்ரீ சாரதா தேவியாரை, சரஸ்வதி என்றே கருதி வழிபடுபவர்களும் உண்டு. எனவே எல்லா தேவ தேவியரின் வடிவமாகிய அன்னை ஸ்ரீ சாரதாதேவியாரை மேதா ஸூக்த மந்திரங்களுக்குரிய தேவியாகக் கொள்வதும் பொருத்தமேயாகும்.)*

*சந்நியாச மந்திரங்கள் என்று சொல்லும் பொழுது 1. மேதா ஸூக்த மந்திரங்கள், 2. அகமர்ஷண*

ஸூக்த மந்திரங்கள், 3. திரி ஸூபர்ண மந்திரங்கள், 4. விரஜா ஹோம மந்திரங்கள் ஆகியவையும் அடங்கும். இவைபோன்ற ஒரு சில முக்கியமான மந்திரங்கள், விவேகமும் வைராக்கியமும் கொண்ட தவ வாழ்க்கைக்கு முக்கிய தூண்கள் போன்று விளங்குகின்றன.

## மேதா ஸூக்தம்

'மேதா ஸூக்தம்' என்ற மந்திரங்கள் மனிதனிடமுள்ள அறிவாற்றலைப் பிரகாசிக்கச் செய்யும் ஆற்றல் வாய்ந்தவை.

"எங்கும் செல்லும் சக்தி வாய்ந்தவளும், மங்களத்திற்குக் காரணமானவளும், அனுக்கிரகம் புரிபவளும், பிரியமானவளுமாகிய மேதாதேவி இங்கு எழுந்தருளட்டும்."

(புத்தி சக்தியை "மேதா தேவி" என்ற தேவதையாக இந்த மந்திரம் அழைக்கிறது.)

"தேவி! உன்னால் அனுக்கிரகிக்கப் பெற்ற நாங்கள் ஞான ஒளி பெற்று கெட்டவார்த்தைகளை விட்டொழித்து, வீரர்களான புத்திரர்களுடனும், சிறந்த சீடர்களுடனும் கூடியவர்களாய் மிகவும் உயர்ந்த பிரம்ம தத்துவங்களைப் பற்றிய சிறந்த வார்த்தைகளைப் பேசும் திறமை பெறுவோமாக."

('கெட்ட வார்த்தை' என்பது புருஷார்த்தங்களை அடைவதற்கு - ஆன்மிக முன்னேற்றத்திற்கு - தடையாக இருக்கும் பயனற்றதும் தீயதுமான வார்த்தைகள். இவை விலக்கப்பட வேண்டும்.)

"ஒருவனாகிய பரமாத்மாவையே அறிவீர்களாக. மற்ற மற்றவர்களை விட்டொழி. இதுவே மோட்சத்திற்குப் பாலம்" என்று முண்டக உபநிஷதமும் கூறுகிறது.

'புத்திரர்கள்' என்பது விவேக வைராக்கியங்களைக் கொண்டு புத்திரர்களுக்குச் சமமாக விளங்கும் ஞான வீரர்களைக் குறிப்பிடுகிறது.)

"ஹே தேவி! உன்னால் அனுக்கிரகிக்கப்பட்ட ஒருவன் ரிஷியாகவோ அல்லது மந்திர த்ரஷ்டாவாகவோ (அதாவது, மந்திரங்களைத் தரிசித்த ஒருவராகவோ) ஆகிவிடுகிறான்.

"உன்னால் அனுக்கிரகிக்கபட்டவன் பிரம்ம தத்துவத்தை உணர்ந்து பிரம்மமாகவே ஆகிறான்."

"மேலும் அவன் பல தெய்விக குணங்கள் பெற்றவனாகி பல விதமான செல்வங்களையும் அடைகிறான். ஹே மேதாதேவியே! குபேரனுடையது போன்ற சிறந்த (ஞான) செல்வத்தை எங்களுக்கு அருள்வாயாக!

(இங்கு செல்வத்தை வேண்டுவது சுயநலத்தின் பொருட்டல்ல. மாறாக, செல்வத்தைப் பெறுவதும் சேகரிப்பதும் தேவையில் இருக்கும் மற்றவர்களுக்கு வழங்குவதற்காகவே ஆகும். செல்வத்தின் பயனே ஈதல் தான். 'செல்வம்' என்பது இங்கு ஞானச் செல்வங்களையும் குறிக்கும்.)

"இந்திரன் எனக்கு நல்ல புத்திசக்தியைக் கொடுக்கட்டும். சரஸ்வதி தேவி எனக்கு நல்ல புத்தி சக்தியை அளிக்கட்டும்."

"தாமரை மாலைகளை அணிந்து விளங்கும் இரண்டு அஸ்வினி தேவர்களும் எனக்கு புத்தி சக்தியை உண்டாக்கட்டும்."

"அப்ஸரஸூகளிடம் எந்த புத்திசக்தி பிரசித்தமோ, கந்தர்வர்களிடம் எந்த மனோபுத்தி பிரசித்தமோ, எந்த சரஸ்வதி வேத மந்திர வடிவமாக தேவர்களிடம் மங்களகரமாக விளங்குகிறாளோ, அந்த

*புத்திசக்தி காமதேனுவைப்போல் அனைத்தையும் அளிக்கவல்லதாய் என்னை வந்தடையட்டும் ஸ்வாஹா."*

*('அப்சரஸ்' என்பது தேவர்களில் அழகிய ஸ்திரீகளின் ஒரு கூட்டத்தைக் குறிக்கிறது. 'கந்தர்வர்கள்' என்பது சங்கீதம், நடனம், முதலியவற்றில் திறமைவாய்ந்த தேவர்களின் ஒரு கூட்டம்.)*

*"காமதேனுவைப் போன்று நல்ல வாசனையுள்ளதும், எல்லாவற்றையும் தன் வடிவமாகக் கொண்டதும் (பல சாஸ்திரங்களின் வடிவமாக இருப்பதும்), தங்கம்போல் பிரகாசிப்பதும் (அல்லது பொன்மயமான வேத அக்ஷரங்கள் வடிவில் பிரகாசிப்பதும்), உலக வடிவமாக எப்பொழுதும் தொடர்ந்து இருப்பதும், புருஷார்த்தங்களை நாடும் உலக மக்களால் மீண்டும் மீண்டும் நாடப்படுவதும், அழகும் சக்தியும் கூடியதும், பாலால் போக்ஷிக்கப்படுவதும் ஆகிய புத்திசக்தி என்னை வந்தடையட்டும்."*

*"அந்த மேதாதேவி மங்கள வடிவத்துடன் வந்து என்னிடம் இருந்து கொண்டு அருள் புரியட்டும்."*

*"அக்னி தேவன் எனக்கு புத்திசக்தியையும், விட்டுப் போகாத (ஞான) சந்ததியையும், பிரம்ம தேஜஸையும் அளிக்கட்டும்."*

*"இந்திர பகவான் எனக்கு புத்திசக்தியையும் (ஆன்மிக மயமான) பிரஜையையும், இந்திரிய சக்தியையும் அளிக்கட்டும்."*

*"சூரியன் எனக்கு புத்தி சக்தியையும், விட்டுப் போகாத சந்ததியையும் (பிரம்மத்தை அடைவதற்கு தடையாக இருக்கும் செயல்களும், சிந்தனைகளுமாகிய) எதிரிகளைப் பயமுறுத்தும் வீரிய சக்தியையும் அளிக்கட்டும்."*

# பகவானின் சந்நிதியில் யோகர் சுவாமிகள்


இலங்கையைச் சேர்ந்த புகழ் பெற்ற சித்த புருஷரும் யோகியுமான யோகர் சுவாமிகள் தனது சீடர்களுடன் க்ஷேத்ராடனத்திற்காக மூன்று முறை இந்தியா வந்திருந்தார். பாடல் பெற்ற சிவஸ்தலங்களுக்கும், அறுபடை வீடுகளுக்கும் யாத்திரை சென்றனர்.

அவர்தம் தீர்த்த யாத்திரையில் ஸ்ரீரமணாஸ்ரமம் வந்த யோகர் சுவாமிகள் பகவான் ரமணரைச் சந்தித்தார். பகவான் யோகர் சுவாமியை விட ஏழு ஆண்டுகள் இளையவர். இருபதாம் நூற்றாண்டின் இரு ஆன்மிக சிகரங்களின் இந்த சந்திப்பு மிக ஆத்மிக முக்கியத்துவம் வாய்ந்தது. பகவானது தியானக் கூடத்தில் ஒருமணி நேரத்திற்கு மேல் இருவரும் சுத்த மௌனத்தில் அமர்ந்து இருந்தனர். இருவருக்கும் இடைய ஒரு சொல்கூடப் பரிமாறப்படவில்லை.

பின்னர் உங்கள் இருவருக்கும் இடைய என்ன பரிமாற்றம் நிகழ்ந்தது? என்று பக்தர் வினவியதற்கு, எதையெல்லாம் கூறிக் கொள்ள முடியுமோ அவை அனைத்தையுமே நாங்கள் பேசிக் கொண்டோம் என்றார். எங்கள் இருவருக்குமே தேவை எதுவும் இல்லை. நாங்கள் 'சும்மா' இருந்தோம். நாங்கள்

---

*['Hinduism Today' தலைமை ஆசிரியர் பரமாசார்ய சதாசிவநாத ஸ்வாமி நம் ஆசிரியருக்கு அனுப்பிய மின்னஞ்சல்.]*



இருவருமே வாய் திறந்து ஒன்றுமே பேசவில்லை. ஒரு மணி நேரம் சும்மா இருந்தோம். அவர் ஒரு சொல்லும் கூறவில்லை. அவர் ஒரு மஹா வீரன் என்று யோகர் சுவாமிகள் கூறினார். (சும்மா என்னும் சொல் சுத்த மௌனத்தைக் குறிக்கிறது.)

1930 ஆம் ஆண்டுகளில் இரண்டு ஜெர்மானிய முதிய பெண்கள் தகுந்த குருவையும், ஆத்மிக அறிவையும் நாடி இந்தியாவிற்கு பயணித்தனர். பல மாதங்கள் அவர்கள் கடும் கோடையையும், சிரமங்களையும் தாங்கி ஒரு தவம்போல் தமது யாத்திரையை தொடர்ந்தனர். தென்திசை நோக்கிப் பயணித்த அவர்கள், அப்போதே உலகெங்கும் பிரசித்தி பெற்ற அத்வைத சிம்மம் பகவான் ரமணரைச் சந்தித்து ஆசி பெற்றனர். பின்னர் தமிழ்நாட்டில் பயணம் செய்து பாக்ஜலசந்தியைக் கடந்து யாழ்ப்பாண தீபகற்பத்தை அடைந்தனர். அவர்களது வினோதமான ஐரோப்பிய உடைகளையும், கையுறைகளையும் விசித்திரமான கைக் குடைகளையும் கண்டு யாழ்ப்பாண மக்கள் வியந்தனர்.

யோகர் சுவாமியைத் தேடிச் சென்ற அவர்கள் அவர் தமது மிகச் சிறிய குடிசையின் உள்ளே அமர்ந்து இருப்பதைக் கண்டனர். உள்ளே சென்று சுவாமிக்குப் பணிந்தனர். அந்தக் கருத்&. ஒளிரும் சுவாமி அளித்த பாலற்ற கடும் தேநீரை அருந்திய அவர்கள், தமது பயணங்கள் பற்றியும், தமது ஆன்மிகத் தேடல் பற்றியும் கூறினர். தமது உள்ளத்தில் எழும்பியுள்ள ஐயங்களையும் கேட்டனர்.

இந்தக் கேள்விகளை நீங்கள் சந்தித்த மற்ற ஞானிகளிடம் கேட்டுள்ளீர்களா? என்றார் யோகர் சுவாமிகள். ஆம் என்றனர் அவர்கள். அவர்கள் பகவானது பெயரைக் கூறாமல் விட்டுவிட்டனர். யோகர் சுவாமிகள் அவர்களிடம் ரமண மகரிஷி உங்களிடம் என்ன கூறினார் என்று கேட்டார். தாங்கள் ரமண மகரிஷியைச் சந்தித்ததை கூறாவிட்டாலும் அவர் அறிந்திருப்பதை கேட்டு அதிசயித்த அவர்கள், அவர் இரண்டு சொற்களை மட்டுமே கூறினார். அவை கடவுள் ஒருவரே! உலகமும் ஒன்றே! என்று பதில் கூறினர். யோகர் சுவாமி இதை விட உயர்ந்த உபதேசத்தை யாருமே தர முடியாது. நீங்கள் செல்லலாம் என்று கூறினார். அம்முதிய பெண்களிகள் தமது பயண நோக்கமே பூர்த்தியான திருப்தியுடன் நீங்கினர்.

## ரமணோதய அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள் தயவுசெய்து தங்களது சந்தாவைப் புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச் செலுத்தவோ செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**ரமணோதயம்**

Voluntary Services

| | |
|---|---|
| K. சுரேஷ் ஜானகிராமன் | 9444127770 |
| ராஜேஷ் M.S. | 9840075778 |

# கூழ்

இந்த நிகழ்ச்சி 1948ஆம் வருடம் நடந்தது. ஒருநாள் காலை பகவான், ஹாலில் பல அன்பர்கள் சூழ இருந்தார். அது மதிய உணவு நேரம். சிலர் ஹாலுக்குள் நுழைந்து விட்டனர். பகவான் வருகைக்காகக் காத்திருந்தனர்.

அந்தச் சமயத்தில் பகவான் முழங்கால் வாதத்தால் மிகவும் அவதிப்பட்டார். மெதுவாக சோபாவிலிருந்து எழுந்து கைத்தடியை ஊன்றிக் கொண்டு உணவுக் கூடத்திற்குள் நுழையும்போது, போர்வை போர்த்திக் கொண்டு தோளில் ஒரு கலயம் தொங்க, கிராமத்திலிருந்து வந்த வயதான பால்காரரைப் பார்த்தார்.

பகவான் அங்கேயே நின்று அவரைப் பார்த்து, யாரு! சின்னப் பையனல்லவா! என்றார். ‘ஆமாம் சாமி நான்தான்’ என்று அந்தக் கிராமவாசி மரியாதையோடும் பக்தியோடும் பதிலளித்தார்.

பகவான்: எப்படி இருக்கிறாய்? நல்லா இருக்கியா? என்னைப் பார்ப்பதற்காகவா வந்தாய்? உன்னுடைய பானையில் என்ன இருக்கிறது? கூழ் கொண்டு வந்திருக்கிறாயா?

கிராமவாசி: (வெட்கத்தோடு) ஆமாம் சாமி!கொஞ்சம் கூழ் கொண்டு வந்திருக்கிறேன்.

பகவான்: அப்படியா! கொடு, குடிக்கிறேன்.

கைத்தடியைக் கீழே வைத்து விட்டு முன்னால் குனிந்து இரு கைகளையும் வாய்க்கு நேர் குவித்துக்கொண்டார். பால்காரர் பானையிலிருந்த கூழை மெதுவாக கையில் ஊற்றினார். பகவான் அதை அமிர்தம்போல் குடித்ததைப் பார்த்ததும் அந்த ஏழைக்குச் சந்தோஷம் தாங்கவில்லை.

உணவுக்கூடம் பசியோடு காத்திருக்கும் அன்பர்களால் நிரம்பி வழிந்தது. அதில் ஒருவர், ஏன் பகவான் வருவதற்கு நேரமாகி விட்டது என்று பார்ப்பதற்காக வெளியே வந்தார். பகவான் கூழ் சாப்பிடுவதைக் கண்டதும், ‘பகவான் உங்களுக்காக நாங்கள் காத்திருக்கிறோம். ஆனால் நீங்கள் இந்தக் கிராமவாசியைக் கவனிக்கிறீர்களே’ என்றார்.

பகவான் கோபத்தோடு, உங்களுக்காக மாத்திரம்தான் இங்கு இருக்கிறேனா? உங்களுக்கு மட்டும்தான் நான் சொந்தமா? நான் மலையில் இருந்தபோது நீங்கள் யாராவது என்மீது அக்கறை காட்டியிருக்கிறீர்களா? அப்பொழுது நான் யாருக்கும் தேவையில்லை. இந்த மாதிரி பால்காரர்களும் ஏழைகளும்தான் தங்களுடைய கூழை என்னுடன் பகிர்ந்து கொண்டார்கள் என்று கூறிக்கொண்டே அந்தப் பால்காரர் தொடர சாப்பாட்டு கூடத்திற்கு உள்ளே நுழைந்தார்.




# திருவண்ணாமலை செய்திகள்

## மஹா பூஜை 28.5.2019

*பகவான் ரமண மகரிஷிகளின் அன்னை அழகம்மையின் மகாபூஜை 28.5.2019 செவ்வாய்க்கிழமையன்று ஸ்ரீரமணாச்ரமத்தில் நடைபெற்றது. வண்ண மலர்கள் கொண்டு அலங்கரிக்கப்பட்ட மாத்ருபூதேஸ்வரர் ஆலயத்தில் அதிகாலை முதல் மஹன்யாச ருத்ர ஜபம், அபிஷேக ஆராதனைகள் மற்றும் சிறப்புப் பூஜைகளுடன் அன்னை அழகம்மையின் மகாபூஜை சிறப்பாக நடந்தேறியது. திரளான பக்தர்கள் கலந்து கொண்டு அன்னையின் அருளைப் பெற்றனர்.*

*சென்னை ரமண கேந்திரம், குரோம்பேட்டை ரமணாலயம், மதுரை ரமண கேந்திரம் மற்றும் இராமநாதபுரம் முருகனார் மந்திரம் ஆகிய இடங்களிலும் இவ்விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.*

*குரோம்பேட்டை ரமணாலயத்தில் நாள்முழுவதும் நடைபெற்ற திருவாசக முற்றோதலில் நூற்றி ஐம்பது ரமண அன்பர்களுக்குமேல் முழு நேரமும் அமர்ந்து ஆத்மார்த்தமாக பாராயணத்தில் ஈடுபட்டது சிறப்பம்சம். இவ்விழாவில் சூளைமேடு ரமணன் குழுவினர் முன்னின்று பங்கேற்றனர்.*



## பசு லக்ஷ்மி சமாதி தினம் 13.7.2019

*பசு லக்ஷ்மி சமாதி தினம் ஸ்ரீ ரமணாச்ரமத்தில் 13/7/2019 சனிக்கிழமையன்று ஆச்ரமத்தில் அமைந்துள்ள பசு லக்ஷ்மி சமாதியில் சிறப்பாக நடந்தேறியது.*

*சிறப்புற அலங்கரிக்கப்பட்ட பசு லக்ஷ்மி சமாதிக்கு விசேஷ பூஜைகள் மற்றும் பசு லக்ஷ்மியின் மேல் பகவான் இயற்றிய வெண்பா, மணவாசி ராமசாமி ஐயர் இயற்றிய பாடல் மற்றும் பிரத்யேகமாக பசு லக்ஷ்மிக்கென பக்தர்கள் இயற்றிய பாடல்களைப் பாடி அன்பர்கள் பசு லக்ஷ்மியை வழிபட்டனர்.*

*இவ்விழா சென்னை ரமண கேந்திரத்தில் கொண்டாடப்பட்டது. ஸ்ரீ ரமணாச்ரமத்திற்கு பாத்தியப்பட்ட குரோம்பேட்டை ரமணாலயத்திலும் பசு லக்ஷ்மி தினம் கொண்டாடப்பட்டது. அதிகாலை 6.30 மணிக்கு கோபூஜையுடன் சிறப்புப் பாராயணம் நடைபெற்று பிரசாதம் விநியோகிக்கப்பட்டது.*

*ரமண சரண தீர்த்தர், திரு.நொச்சூர் வெங்கடராமன் அவர்களின் பிரவசனம் சென்னை நாரத கான சபாவில் இவ்வாண்டும் 2019 ஜூலை மாதம் கீழ்க்கண்ட வண்ணம் நடைபெறவுள்ளது.*


|| HARI : || ARUNACHALA SHIVA ||





Respected Devotees,

Discourse on

## Bhagavata Darsanam XIV

**DATE** 21 July (Sun) - 27 July (Sat), 2019

**TIME** 6.30 - 8.30 pm

and

DEVI KALOTHRAM

**DATE** 22 July (Mon) - 27 July (Sat), 2019

**TIME** 7 - 8 am

by Ramana Charana Thirtha **Sri Nochur Venkataraman**

at **Narada Gana Sabha,** TTK Road, Alwarpet, Chennai 18.

Your honourable presence and support in all respects to conduct the Yagna is welcome.

**Note:** Devotees are requested to occupy their seats well in time before 6.30 pm. For the convenience of devotees, kindly proceed to AC Mini Hall, provided with audio and video, when the main hall is full.

VIDEO WEBCASTING AVAILABLE ON **'VOICE OF RISHIS-LIVE'**

**Prof. Anantha Raman**
A8, Vinay Vihar, 2, New Beach Road,
Thiruvanmiyur, Chennai - 600041

**Contact**
**Email:** prof.anantharaman@gmail.com
**Ph:** 044 24514902, 98404 28506

*ADVT*

# ரமணி சுப்ரமணியம்



ஸ்ரீ ரமணாச்ரம நிர்வாகி திரு. வே.சு. மணி அவர்களின் துணைவியார் திருமதி ரமணி சுப்ரமணியம் அவர்கள் கடந்த 13/5/2019 அன்று தமது 72 ஆவது வயதில் பகவான் மலரடி சேர்ந்தார்.

திருமதி ரமணியின் பெற்றோர்கள் பகவானை தரிசிக்கும் நற்பேறு பெற்றவர்களாவர். பிற்காலத்தில் அத் தம்பதிகளின் மகளான இவருக்கு பகவான் குடும்பத்திலேயே மருமகளாகும் பாக்கியம் கிடைத்தது. தனது 22 ஆம் வயதில் திரு வே.சு. மணி அவர்களை கரம் பிடித்தார்.

திரு. வே.சு. மணி அவர்கள் பொறியாளராக மும்பையில் பணியாற்றிய போது, ரமணி-மணி தம்பதியினர் தங்கள் இல்லத்திற்கு வரும் ஆச்ரம அன்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு சிறந்த முறையில் விருந்தோம்பல் செய்தனர். வருடத்திற்கு ஒருமுறை அருணாசலம் வருவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

வளர்ந்து வரும் ஆச்ரமத்தை நிர்வகித்து வந்த தனது தந்தை திரு. டி.என் வேங்கடராமனுக்கு (சுவாமி ரமணானந்தா) உதவுவதற்காக திரு. மணி அவர்கள் 1985 ஆம் ஆண்டு தனது பணியிலிருந்து விருப்ப ஓய்வு பெற்றார். திருமதி ரமணி அவர்களும் தனது மாமனாரை கவனித்துக் கொண்டும் கணவருக்கு உறுதுணையாகவும் இருந்து வந்தார்.

பாசமிகு தாயாக இருந்த போதிலும் தரமான கல்வியை தமது இரண்டு குழந்தைகளுக்கு அளிக்க வேண்டி தொலைதூரத்தில் இருந்த ரிஷி வேலி எனும் உண்டு உறைவிடப் பள்ளியில் அவர்களை சேர்த்து அவர்களைப் பிரிந்திருப்பதற்காகத் தன்னை மனதளவில் தயார்படுத்திக் கொண்டார்.

*எண்ணற்ற பக்தர்கள், நண்பர்கள், உறவினர்கள் ஆச்ரம தலைவரது இல்லமான 'மங்கள நிவாஸு'க்கு எப்போதும் வந்தவண்ணமிருப்பார்கள். அவ்விருந்தினர்கள் திருமதி ரமணி அவர்களின் இன்முகத்துடன் கூடிய விருந்தோம்பலை நன்கு அறிவர். தமிழ், தெலுங்கு, ஹிந்தி, பெங்காலி மற்றும் ஆங்கிலத்தில் சரளமாக உரையாடக்கூடியவராதலால் அன்பர்களுடன் அவர்களது தாய்மொழியில் பேசி அவர்கள் தங்கள் இல்லத்தில் இருப்பதுபோன்று உணரவைப்பார்.*

*பகவானுடன் இருந்த ஆச்ரம பழம்பெரும் பக்தர்களான குஞ்சு சுவாமி, ராமசாமி பிள்ளை போன்றோரது அன்பைப் பெற்றவராக விளங்கினார். பகவானது தனித்துவமான போதனைகளை பற்றிய புரிதலை வலுப்படுத்திய திருமதி கனகம்மாள் அவர்களுடன் நல்ல ஆழ்ந்த நட்பு இவருக்கு இருந்தது. ஆச்ரம தினசரி தமிழ்ப் பாராயணத்தில் மிகுந்த ஈடுபாட்டுடன் தவறாமல் கலந்து கொள்வதுடன் ஆச்ரம நிகழ்ச்சிகள் அனைத்திலும் ஆர்வத்துடன் பங்கு பெறுவார்.*

*ரமணி அவர்கள் கணவரின் உதவியோடு தனது பெற்றோர்களின் வயோதிக காலத்தில் அவர்களை திருவண்ணாமலைக்கு அழைத்துவந்து 'மங்கள நிவாஸ்' இல்லத்தில் தங்கவைத்து அவர்களது இறுதிக்காலம் வரை நன்கு கவனித்துக் கொண்டார்.*

*2019 ஜனவரி மாதம் தனது 50 ஆவது ஆண்டு திருமண நாளையும், பிப்ரவரியில் கணவரின் 80 ஆவது வயது பூர்த்தியான சதாபிஷேகத்தையும் குடும்ப உறுப்பினர்கள், பக்தர்கள் மற்றும் நண்பர்களுடன் மன நிறைவுடன் கொண்டாடினார். உடல் வேதனையிலும் பொறுமையாகவும் அமைதியாகவும் இருப்பவரான ரமணி, தனது ஆரோக்கியம் குன்றி வருவதை அறிந்து அதை மிகத் தைரியமாக எதிர்கொண்டார்.*

*திருமதி ரமணி, 13.5.2019 அன்று ரமண மலர்ப்பதங்களில் ஐக்கியமானபோது திரளான அன்பர்கள் சூழ தனது இறுதிப்பயணத்தை மேற்கொண்டார்.*

# ஆச்ரம ஆடிட்டர் திரு. K.V.ரமணன்



*ஆச்ரம ஆடிட்டர் திரு. K.V.ரமணன் கடந்த 24/4/2019 அன்று காலமானார். அவருக்கு வயது 85.*

*இவர் தலைமுறையாக பகவான்மீது பக்தி கொண்ட பரம்பரையில் பிறந்தவர். இவரது பாட்டனார் திரு. N.S. ரங்கநாத ஐயர் மதுரையில் பகவானது விளையாட்டுத் தோழராவார். இவரது தகப்பனார் பேராசிரியர் N.R. கிருஷ்ணமூர்த்தி ஐயர் பகவானுடன் இருக்கும் பேறு பெற்றவர். 1940 களில் பகவான் பிறந்த திருச்சுழி இல்லம் (சுந்தர மந்திரம்) மற்றும் மதுரை ரமண மந்திர இல்லங்களை ஆச்ரமம் வாங்குவதற்கு இவரது பாட்டனார் ரங்கநாத ஐயர் உதவி புரிந்துள்ளார். மதுரை ரமண மந்திரத்தை தமது இறுதிநாள்வரை நன்கு கவனித்து வந்தார்.*

*அறிவியலில் ஆழ்ந்த அறிவு பெற்றிருந்த பேராசிரியர் N.R. கிருஷ்ணமூர்த்தி ஐயர் காலதேசங்களை கடந்த தனித்துவமான பகவானின் உபதேசங்களை நன்கறிந்தவராவார்.*

*ஆடிட்டர் ரமணன் தமது ஐந்தாவது வயதிலேயே பகவானைக் காணும் பாக்கியம் பெற்றவர். தமது 16 ஆவது வயதில் பகவானைத் தரிசிக்க வந்தபோது தாம் எப்போதும் பகவானருகில் அணுக்கமாக இருக்க வேண்டும் என்ற தமது கோரிக்கையை வேண்டுதலாக வைத்தார். பகவான் அதை ஆமோதிப்பதுபோல் தலையசைத்தார். பின்நாட்களில் திருவண்ணாமலையில் குடியேறிய திரு. ரமணன் ஆச்ரம ஆடிட்டராக பல ஆண்டுகள் சேவை செய்துவந்தார்.*

*சில வருடங்களாக மருத்துவ சிகிச்சைக்காக சென்னையில் தங்கியிருந்தபோதிலும், உடல்நிலை மற்றும் தொலைவு போன்றவற்றை பொருட்படுத்தாது சென்னை குரோம்பேட்டையில் உள்ள ரமணாலயத்திற்கு தினமும் சென்று பகவானை வழிபடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.*

*நான்காம் தலைமுறை பக்தராக தற்போது அன்னாரது மகன் திரு. ரங்கநாதன் ஆச்ரம ஆடிட்டராக செயலாற்றி வருகிறார்.*

## திருமதி அன்னபூர்ணம்



*திருமதி அன்னபூர்ணம் அவர்கள் கடந்த 14/3/2019 வியாழக்கிழமையன்று தமது 72 ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.*

*இவர் சிறந்த சிவ பக்தரும் ரமண பக்தருமான கரூர் தைலா சில்க்ஸ் உரிமையாளர் திரு. சண்முகசுந்தரம் அவர்களின் தாயார் ஆவார். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய ரமணோதயம் பிரார்த்திக்கிறது.*

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் 2019

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஜூலை | 16 | செவ்வாய் | அதிகாலை 3 | 17 | புதன் | அதிகாலை 4 |
| ஆகஸ்ட் | 14 | புதன் | மாலை 4 மணி | 15 | வியாழன் | மாலை 6 மணி |
| செப்டம்பர் | 13 | வெள்ளி | காலை 8 மணி | 14 | சனி | காலை 10 மணி |
| அக்டோபர் | 13 | ஞாயிறு | நள்ளிரவு 1 மணி | 14 | திங்கள் | அதிகாலை 3 |
| நவம்பர் | 11 | திங்கள் | மாலை 7 மணி | 12 | செவ்வாய் | இரவு 8 மணி |
| டிசம்பர் | 11 | புதன் | காலை 11 மணி | 12 | வியாழன் | காலை 11 மணி |

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| ***மைலாப்பூர்*** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | .......... | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் மேலாளர் கண்ணன் | .......... | 9940418375 |
| ***குரோம்பேட்டை,*** *ரமணாலயம்* | .......... | 9444261296 |
| ***கிழக்கு தாம்பரம்*** திரு M.A. ராமசாமி | .......... | 9790873138 |
| ***நங்கநல்லூர்*** திரு S. இராமமூர்த்தி | .......... | 22244667 |
| ***மாம்பலம்*** திரு M.K. வைத்தியநாதன் | .......... | 23716495 |
| ***விருகம்பாக்கம்*** திருமதி கௌசல்யா | .......... | 24790635 |
| ***கொளத்தூர்*** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | .......... | 9884355454 |
| ***சூளைமேடு*** திரு V. ரமணன் | .......... | 9444172623 |
| ***புதுச்சேரி*** *ரமண கேந்திரம்* | .......... | 0413-2272141 |
| ***மதுரை*** சோமசுந்தரம் | .......... | 04522348157/2346102 |
| ***இராமநாதபுரம்*** சிரஞ்சீவி | .......... | 9360047936 |
| ***திருச்சுழி*** ஹாலாஸ்ய பட்டர் | .......... | 9442004615 |
| ***மலையாண்டிபட்டினம்*** பாலசுப்பிரமணியம் | .......... | 9965622878 |
| ***பொள்ளாச்சி*** ரமண குமார் | .......... | 9487016880 |
| ***ஒட்டன்சத்திரம்*** வடமலைக்கண்ணன் | .......... | 9842912474 |
| ***பழனி*** என். சோமசுந்தரம் | .......... | 9942327770 |
| ***சேலம்*** குப்புசாமி | .......... | 0427-2295460 |
| ***வந்தவாசி*** டாக்டர் ரவி | .......... | 9787180757 |
| ***மடம்*** சுந்தரமூர்த்தி | .......... | 9942264556 |
| ***திண்டுக்கல்*** பழ. முத்தையா | .......... | 9443070924 |
| ***பூண்டி*** மாரியப்பன் | .......... | 9486576687 |

---

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.



அன்னை அழகம்மையின் ஆராதனை விழா

ஸ்ரீ ரமணாச்ரமம், திருவண்ணாமலை





Registered with the Registrar of Newspaper for India  RNI No.:TNTAM/2001/5542

